


# திறவுகோல்

ஆவணி
2048

மாத இதழ்

ஒன்றுபட்டால்
உண்டு வாழ்வு
(பாகம் - சுரண்டல்)

---

கருவை கூட கலைக்கும்
சீமை கருவை

---

உள்ளூர் சந்தைதான்
உலக சந்தை

---

ஹைட்ரோகார்பனை
நான் ஆதரிக்கிறேன், ஆனால்...

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

## பாகம் - சுரண்டல்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

அறிவினாலும் ஆராய்ச்சியினாலும் இயற்கையைவிடச் சிறந்த ஒன்றை உருவாக்க முடியும் என்று
மனித இனம் நம்புவது கேலிக்குரிய மாயை.

- மசனோபு ஃபுக்குவோக்கா
சப்பானிய இயற்கை வேளாண் விஞ்ஞானி

உங்கள் வீட்டில் இன்னொருவன் வந்து உட்கார்ந்து கொண்டு உங்களை விரட்டினால் அல்லது நீங்கள் எப்படி வாழ வேண்டும் என நிர்பந்தித்தால் அல்லது உங்கள் வீட்டில் உங்களையே அடிமையாக வைத்திருந்தால் அல்லது இந்த மூன்றையுமே செய்தால் நீங்கள் என்ன செய்வீர்?

திருப்பி அடித்து விரட்டுவீர் தானே! அல்லது குறைந்த பட்சம் எதிர்ப்பையாவது பதிவு செய்வீர்கள் தானே! இல்லை அப்படியே வாழ்ந்து விட்டு போய்விடுவேன் என்று எண்ணுவீர்களா மாட்டீர்கள் தானே! உங்கள் வீட்டை அப்படியே உங்கள் தெருவாக, ஊராக, மாநிலமாக, நாடாக கற்பனை செய்து பாருங்கள்.

நிலைமையின் தீவிரம் உணர்வீர்கள். இதை நாம் நம்முடைய பொருளாதார தேடலில் சாதாரணமாக கடந்து போயிருப்போம். ஆனால் வாழ்க்கைக்கான அடிப்படையே அங்கு தான் உள்ளது. நாம் தனித்து வாழ இயலாது. நாம் உண்ணும் உணவிலிருந்து உடுக்கும் உடையிலிருந்து அனைத்தையும் அடுத்தவர்களை சார்ந்து தான் வாழ வேண்டும், அது தான் இயற்கை.

இங்கு இயற்கையே நமக்கான மிக பெரிய பாடம். இருளும் ஒளியும் மழையும் வெப்பமும் காற்றும் ஈரப்பும் என அனைத்தும் சேர்ந்து இருப்பதால் தான் இங்கு மனிதர்கள் வாழ கூடிய சூழல் இருக்கிறது. அதேபோல் நாம் ஒவ்வொருவருடன் கூடி வாழ்வது தான் வாழ்க்கை. அதை விடுத்து வாழ ஆரம்பிப்பது இயற்கையை மீறும் செயல்.

இந்த சமநிலை ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்துள்ளது, அக்காலத்தில் யார் எதிரி என மக்களுக்கு நேரடியாக தெரியும் அதனை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இருந்தனர், இவ்வளவு காலம் தற்காத்து கொண்டும் இருந்தனர். ஆனால் இப்பொழுது கண்ணுக்கு தெரியாத ஏன் சிந்தித்தால் கூட அறிய இயலாத வகையில் தான் நம் எதிரிகள் ஒன்றுடன் ஒன்று கலந்துள்ளனர். இவற்றை ஏற்கனவே உணர்ந்தவர்கள் ஒன்று போராடி கொண்டிருப்பார்கள் அல்லது ஒடுக்கப்பட்டிருப்பார்கள்.

நீங்கள் நினைக்கலாம் அப்படி என்றால் நாம் ஒடுக்கபடுவோமே என்று. உங்களுக்கு சிறு வயதில் கண்டிப்பாக ஒரு கதை சொல்லி இருப்பார்கள், அதன் அடிப்படையாக ‘‘ஒற்றுமையாக இருந்தால் உண்டு வாழ்வு’’ என்று சொல்லி முடித்திருப்பார்கள்.

அது ஒரு ஆப்ரிக்க நாடு. அவர்கள் அங்கு அமைதியாக ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தனர். நாட்டில் பெருவாரியான பகுதிகள் காடுகளாக, விவசாய நிலங்களாக, சதுப்பு நிலங்களாக இருந்த பசுமை படர்ந்த நாடு. விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல் போன்ற தொழில்கள் தான் பிரதானம். பூமிக்குமேல் அந்நிலங்கள் எவ்வளவு வளமாக இருந்ததோ அதேபோல் பூமிக்கு கீழ் எண்ணெய் நிரம்பி இருந்தது. அவற்றை கண்டறிந்த அமெரிக்க எண்ணெய் நிறுவனம் 1960களில் அங்கு நுழைந்தது.

அந்நிறுவனம் அந்நாட்டின் உள்கட்டமைப்பான சாலைகள், மின்சாரம், பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவை கட்டித்தருவதாகவும் உள்ளூர் மக்களுக்கு வேலை கொடுத்து மாதாந்திர சம்பளம் கொடுப்பதாகவும் ஆசை வார்த்தை காட்டி அந்நாட்டில் எண்ணெய் எடுக்க அனுமதி வாங்கியது. இங்கு எண்ணெய் நிறுவனம் என்பது வெறுமனே நிறுவனம் மட்டும் அல்ல, அமெரிக்க அரசும் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படை கட்டமைப்பை செய்துகொடுக்க அமெரிக்க அரசு அந்நாட்டிற்கு கடன் வழங்கும், அதற்கு வட்டியும் உண்டு. அதேபோல் அக்கட்டமைப்பு வேலைகளை செய்வதும் அமெரிக்க நிறுவனங்களே. ஆக பணத்தை கடனாக கொடுத்து அந்த பணத்தை அக்கட்டமைப்பை ஏற்படுத்தும் அமெரிக்க நிறுவனங்கள் மூலம் மீண்டும் அமெரிக்காவிற்கே மடைமாற்றி அந்த கடனுக்கான வட்டியையும் அந்நாட்டிடம் வசூலித்தது.

விவசாய நிலங்கள், காடுகள் அளிக்கப்பட்டு எண்ணெய் உறிஞ்சும் ஆலைகளாகவும் அந்த ஆலைகளில் பணிபுரியும் வெளிநாட்டினர் தங்க அனைத்து வசதிகளும் படைத்த தங்குமிடங்களாகவும் மாற்றப்பட்டன. உலகிலேயே அதிக சதவிகித காடுகள் அழிக்கப்பட்ட நாடு அதுதான். அந்நாட்டில் உள்ள மொத்த காட்டில் சுமார் 60 சதவிகித காடுகள் அழிக்கப்பட்டன.

இதனால் மழை குறைந்தது. அதேபோல் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் மண்ணும் கடலும் மாசடைந்தன, நிலத்தடிநீர்மட்டம் குறைந்தது அவற்றில் எண்ணைவித்துகள் கலந்தன, அவ்விடங்களில் வெப்பம் அதிகமாகி வாழ தகுதியற்ற இடங்களாயின. மண்ணும் நீரும் பாழானதால் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு அழிந்தது. கடலில் கலக்கப்பட்ட கழிவுகளால் மீன்கள் செத்து மிதந்து மீன்பிடி தொழிலும் அழிந்தது. செய்ய தொழில் இல்லாமலும் உணவு உற்பத்தி இல்லாமலும் மக்கள் வாழ்வாதத்திற்கும் உணவிற்கும் என்னசெய்வதென்றே தெரியாமல் உள்நாட்டிலேயே அகதிகளாக அலைந்தனர் வாழ்வாதாரத்திற்கும்.

மக்களின் புரட்சி வெடிக்கும் என்பதை முன்கூட்டியே தெரிந்திருந்த எண்ணெய் நிறுவனமும், அமெரிக்க அரசும் அங்குள்ள ஆட்சியின் சிறத்தன்மையை ஏற்கனவே கெடுத்து வைத்திருந்தது. மக்களுக்குள் மத இன துவேஷங்களை உருவாக்கி குழு குழுவாக சண்டை இட்டு கொள்ளும் படி செய்திருந்தது. உள்நாட்டு பிரச்சனைகளாலும் வறுமையாலும் அரசியல் நிலையற்றத் தன்மையாலும் அந்நாடு சின்னாபின்னமானது.

இதனை பயன்படுத்திக் கொண்டு அங்கு ராணுவ ஆட்சியை அந்த எண்ணெய் நிறுவியது. இராணுவ ஆட்சியின் மூலம் எண்ணெய் நிறுவனங்களுக்கு எதிராக போராடுபவர்களை ஒடுக்கியும், தூக்கிலிட்டும் அராஜக போக்கை கடைப்பிடித்தது. அடுத்ததாக அண்டை நாடுகளுடனும் எல்லை மற்றும் மத ரீதியான பிரச்சனையை தூண்டி மக்களையும் ஆட்சியையும் திசைதிருப்பி தன்னுடைய அசுர வேக எண்ணெய் உறிஞ்சலை நடத்தியது.

நாட்டிற்கு தேவையான ஆயுதங்களை வழங்கியும் அதேபோல் சில குழுக்களுக்கு ஆயுதங்கள் விற்றும் அமெரிக்கா தன்னுடைய ஆயுத வியாபாரத்தையும் அங்கு நடத்தியது. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல்.

எண்ணெய் எடுப்பதில் வருமானம் பார்த்தது, உள்நாட்டு கட்டமைப்பை மேம்படுத்த கடன் கொடுத்து, அக்கடனை திருப்பி செலுத்த இயலாத அந்நாட்டை அடிமைப்படுத்தியது, பிரச்சனைகளை தூண்டிவிட்டு அவற்றை காத்துக்கொள்ள ஆயுதம் வழங்குகிறேன் என்ற பெயரில் அதிலும் வருமானம் பார்த்தது.

இப்படி தன்னுடைய பணத்தாசையால் ஒட்டுமொத்த நாட்டையும் அம்மக்களின் வாழ்வையும் கெடுத்தது. இன்று அந்தநாடு மக்கள் வாழ தகுதியற்ற நாடாக ஐ.நா சபையின் அறிக்கையில் 186 வது பட்டியலில் உள்ளது. பசியினால் மக்கள் இறப்பு சதவிகிதம் அதிகம் உள்ள நாடு என்பதிலேயே நாம் அதன் நிலையை புரிந்து கொள்ளலாம்.

இது ஏதோ ஒரு நாட்டின் கதையல்ல. இங்குள்ள பெருவாரியான நாடுகளின் கதை. ஒரு சில நிறுவனங்களால் ஒரு சில பெரும் அரசுகளால் ஏனைய நாடுகளும் நாட்டு மக்களும் சுரண்டடப்பட்டு அவர்களின் வாழ்க்கை முறை சிதைக்கப்படுகிறது. அடிப்படை வழிமுறை ஒன்று தான். வளர்ச்சி உள்கட்டமைப்பு என ஒரு நாட்டுக்குள் நுழைதல், இயற்கையை சுரண்டி அதன்  மூலம் பணம் ஈட்டுதல், இதற்கு அந்தந்த நாட்டு அரசுகளை அடிபணிய வைத்தல்.

மக்கள் எதிர்க்காமல் இருக்கும் போது அவர்களுக்குள் சாதி மத இன வர்க்க ரீதியான பிரச்சனைகளை தூண்டி ஒற்றுமையை குலைத்தல். அண்டை நாடுகளுடன் பிரச்சனையை ஏற்படுத்துதல், இறுதியாக அனைத்தையும் கட்டுப்படுத்த என்று சொல்லி ஆயுதங்களையும் விற்று பணம் ஈட்டப்படுகிறது. நம் நாட்டில் இது ஒரு படி மேலே உள்ளது.

காரணம் நம் நாடு சிதைக்கப்படும் அதே நேரத்தில் ஒரு உலக சந்தையாகவும் உள்ளது. அதனால் தான் இங்கு வளர்ச்சியும் வீழ்ச்சியும் சரி சதவிகித வழியில் உள்ளது. அனைத்து உற்பத்திகளையும்  வாங்க இங்கு நுகர்வோர் உள்ளனர். அனைத்து நாடுகளுக்கும் சேவை செய்ய இங்கு பெரிய சேவை பிரிவும் உள்ளது. அவர்களின் சுரண்டலுக்காக இங்கு பெருவாரியான மக்களும் பகுதிகளும் இருக்கின்றன.

இவ்வளவு பெரிய நுகர்வும் சேவையளிக்கும் திறன் இல்லாவிட்டால் நாம் என்றோ அந்த ஆப்ரிக்க நாடு போல் சுரண்டி அழிக்கப்பட்டிருப்போம். ஆக நம்மையே சுரண்டி, நம்மிடமே அதனை சந்தைப்படுத்தி நம்மையே அவர்களுக்கு சேவை வழங்கவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் நம்மை அவர்களுடைய கதாபாத்திரங்களாக மாற்றி விட்டார்கள், அதிலிருந்து விடுபட நாம் முதலில் ஒற்றுமையாக வாழ பழக வேண்டும். தொடக்கத்தில் சொன்னதுபோல் ‘‘ஒன்று பட்டால் உண்டு வாழ்வு’’.

அடுத்த பாகம் - தீவிர வாதம். தொடரும்.

ஒற்றுமையுடன்
**- ரா.ராஜராஜன்,** மன்னார்குடி



ஓவியம்: **ராம்குமார்**
முதல் ஆண்டு
அஞ்சலை அம்மாள் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி

# கருவை கூட கலைக்கும் சீமை கருவை


நிரஞ்சன்

மரங்களில் பேய் இருப்பதாக சொல்வதுண்டு. ஆனால் அந்த மரமே பேயாக இருப்பதை பார்த்திருக்கிறோமா? அந்த பேய்களுக்கு மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேலி காத்தான், வேலி கருவை, முற்செடி என்றெல்லாம் அழைக்கப்படும் சீமை கருவேல மரத்தை தான் சொல்கிறேன். இது வேலி காத்தான் அல்ல வேளாண்மை சாத்தான்.

பசுமை புரட்சி என்ற பெருங்குற்றத்தின் முக்கிய குற்றம் இந்த சீமை கருவேல மரம். கரீபியன் தீவுகளில், அமெரிக்க கண்டத்தில், மெக்ஸிகோ, பல்கேரியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் காணப்பட்ட இந்த விஷ மரம் எப்படி இந்தியாவுக்கு வந்தது. விறகு வெட்ட பயன்படும் என்று சொல்லி 1960, 70களில் வானூர்தி (helicopter) மூலமாக சீமை கருவை விதைகள் இந்தியாவில் தூவப்பட்டது.

தூவப்படுவது விதைகள் அல்ல, சப்பானில் வீசப்பட்டதை விட ஆபத்தான அணுகுண்டுகள் என்பது அப்போது மக்களுக்கு தெரியவில்லை. ஆனால் வீசியவனுக்கும், வீசுவதற்கு அனுமதித்தவனுக்கும் தெரிந்தே இருந்தது. நம் நீர்வளத்தை கெடுத்து, வேளாண்மையை சிதைத்து, விவசாயியை அழித்து நிலங்களை கையகப்படுத்துவதே வீசப்பட்டதன் நோக்கம்.

சீமை கருவேல மரம் பூமிக்கு மேலே வளர்வது என்னவோ 12 அடி தான். ஆனால் அதன் வேர்கள் 100 அடிக்கும் மேலாக ஆழமாக வளர்ந்து செல்ல கூடியவை. ஆணி வேரை போன்று துணை வேர்களும் அழுத்தமாக இருக்கும். இதன் வேர்கள் நிலத்தில் இருக்கும் நீரை உறிஞ்சி எடுத்து விடும். நிலத்தடி நீர் குறைந்துகொண்டே போகும். இதன் நீர் பசி அருகில் இருக்கும் மரங்களுக்கு நீர் கொடுக்காது.

இதன் அருகில் எந்த சிறு தாவரங்களும் வளராது. இதன் வருகைக்கு பிறகு பல மூலிகை செடிகள் அழிந்திருக்கிறது. நிலத்தில் இருக்கும் அனைத்து சத்துக்களையும் உறிஞ்சி மண்ணை மலடாக்கும். பூமி வெப்பமடையும். நிலத்தடி நீரை உறிஞ்சுவதோடு மட்டும் அல்லாமல் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தையும் உறிஞ்சி விடும். இதன் விளைவாக அனல் காற்று அதிகரிக்கும், மழைப் பொழிவு குறையும். இம்மரங்கள் ஈசானி மூலையில் (வட கிழக்கு) கூடும் மேகங்களை கலைத்து மழையை தடுத்து நிறுத்தக் கூடியவை.

மிகுந்த வெப்பமான இந்த மரங்களில் பறவைகள் கூட கூடு கட்டாது. வேடந்தாங்கல் சரணாலயத்தில் இம்மரங்கள் பரவியதால் பல பறவைகள் செத்து விழுந்தன. பிறகு அதை முற்றிலுமாக அழித்தார்கள். இதன் காய்களை, விதைகளை உண்ணும் கால்நடைகளுக்கு வயிற்று கோளாறுகளும் பற்கள் தேய்மானமும் ஏற்படுகின்றது. இதன் அருகில் இருக்கும் கால்நடைகளுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது.

அதன் குட்டிகளும் ஊனமாக பிறக்கிறது. விலங்குகள் மட்டும் அல்ல மனிதர்களுக்கும் மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. பெண்களுக்கு கரு கலையும் அபாயம் இருக்கிறது. இதன் அருகில் குடி இருக்கும் பெரியோர்களுக்கு குழந்தைகளுக்கும் மூர்க்கத்தனம் முரட்டுத்தனம் அதிகரிக்கிறது. மேலும் உடம்பில் இருக்கும் நீர்ச்சத்தையும் எண்ணெய் பிசுபிசுப்பையும் உறிஞ்சி விடுகிறது. அதனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது.

சீமை கருவை பூக்களில் இருந்து தேனீக்கள் தேன் எடுப்பதால் சுத்தமான தேன் கிடைப்பதே இல்லை என்பது பெரும் அதிர்ச்சி. அதனால் தான் குழந்தைகளுக்கு தேன் கொடுத்தால் சளி பிடிக்கிறது. அதனால் இந்த காலத்து பெற்றோர்கள் தேன் கொடுப்பதையே நிறுத்திவிட்டார்கள்.

விறகு பயன்பாடு என்று சொல்லி தான் இந்த மரம் இங்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் இது விறகு அல்ல, பெண்களுக்கான சிகரெட். இதை விறகெரிக்கும் போது அதன் ஒரு சிறு கட்டையில் இருந்து வரும் புகை 14 சிகரெட் பிடித்ததற்கு சமம் என்று ஆய்வு சொல்கிறது. இந்த மரத்தின் புகையை சுவாசித்தால் புற்று நோய் கூட ஏற்படும். மேலும் ஆசுதுமா, தோல் நோய்கள், நரம்பு பிரச்சனைகள் ஏற்படுகின்றது.

‘‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி’’ என்று சொல்லுவார்கள். அதில் வேலம் என்பது நமது நாட்டு கருவேல மரத்தை குறிக்கிறது. பல்லுக்கு உறுதி கொடுத்த, பல நோய்களுக்கு மருந்தாக பயன்பட்ட, மூலிகை தன்மை கொண்ட மகத்தான நம் நாட்டு கருவேல மரத்தின் பெயரை நீர்வளத்தை கெடுக்கும், நிலத்தை சிதைக்கும், சுற்று சூழலை மாசு படுத்தும், கரி காற்று (carbon di oxide) அதிகம் வெளியிடும், ஆண்மையின்மை உண்டாக்கும், கருவையே கூட கலைக்கும் இந்த மோசமான கருவைக்கு வைத்தது பெரும் பாவச்செயல். தற்போது சீமை கருவேல மரம் நாடெங்கும் வளர்ந்து கிடக்கிறது. நாட்டு கருவேல மரம் கண்ணில் தென்படுவதே இல்லை.

சீமை கருவேல மரங்களில் காய்கள் மண்ணில் விழுந்துகொண்டே இருக்கிறது. 5 வருடங்களுக்கு அவை மண்ணில் மக்காது. பிற மரங்களின் வளர்ச்சியை தடுக்கும் சீமை கருவை தனது விதைகளையும் வளர விடாது. பெரும் மரங்களை அகற்றினால் மண்ணில் கிடக்கும் அதன் விதைகள் மீண்டும் முளைக்கும். அதை தடுக்க ஒரே வழி அகற்றப்பட்ட இடத்தில் நமது நாட்டு மரங்களை வைத்து 5 ஆண்டுகள் பராமரித்தால் சீமை கருவை அடியோடு அழிக்கப்படும்.

எந்த ஒரு அரசாங்கமும் இதை அகற்ற முன் வராது. மக்கள் நாம் தான் முன் வர வேண்டும். கேரளாவில் மக்கள் விழிப்புணர்வு தான் அரசாங்கத்தை முன் வர வைத்தது. விளைவு கேரளாவில் சீமை கருவை முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது. கேரளா அழகின் ரகசியம் இது தான்.

சீமை கருவேல மரங்களை அழிப்போம்!
நாட்டு கருவேல மரங்களை வளர்ப்போம்!

– நிரஞ்சன், மன்னார்குடி

# "திருமணம்"



ஓவியம்
ச.பிரீத்தி
6 ம் வகுப்பு,
ARJ பள்ளி
மன்னார்குடி

இருமனம் இணைகிற நிகழ்வாம்!
இரு குடும்பம் இணையும் நிகழ்வாம்!
சான்றோர் கூடி இருக்க தாலி ஏறுகிற நிகழ்வாம்!

ஓவ்வொரு பெண்ணும்
தன்மானத்தை இழந்து
உற்றாரை துறந்து
இனி எல்லாம் அவர் என்று
சொல்லும் நிகழ்வாம்!

அவளின் சுயம் தான் என்கிற அடையாளம்
குடும்பம் என்னும் பெயரால்
நசுக்கப்படுகிற நிகழ்வாம்!

தாம்பத்யம் அழகான கூடலின் நிகழ்வாம்!

ஆனால் இங்கு கூடலின் வார்த்தையற்று போக
பொருளாய் போன நிகழ்வாம்!

உணர்வற்று பெற்ற பிள்ளைக்கும், கட்டியவனுக்காகவும்
வாழ நினைக்கும் வாழ்வியலின் நிகழ்வாம்!

ஆனால் திருமணத்தால் ஓர் பெண்ணின் சுயத்தை இழந்து
பிணமாய் நடக்க வேண்டிய நிகழ்வாம்!

பருவம் வந்து விட்டால் பெண் பிள்ளை மட்டும்
சுமையாய் ஆகி போன நிகழ்வாம்!

பெண்ணின் படைப்பே ஆணின் துணையாகி
வாரிசு சுமக்கும் இயந்திரமாகி போன நிகழ்வாம்!

சபையோர் முன்பு தலைகுனிந்து எல்லாவற்றையும் ஏற்பது
அவர்களுக்கான மரியாதை
எப்போது கிடைக்கும்
பெண் இனத்திற்கான
உரிமை நிகழ்வு!

**– கண்ணம்மா**, உள்ளிக்கோட்டை

# காணாமல் போகும் இந்திய விவசாயிகள்



க. சதீஷ்குமார்

1991-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 84 கோடி. இன்றைய தேதியில் இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 127 கோடி. கடந்த 22 வருடங்களில் இந்திய மக்கள் தொகை சுமார் 50% சதவீத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இதே காலகட்டத்தில் பயிர் தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை பெரிய அளவில் வீழ்ச்சியடைந்திருப்பது மத்திய திட்ட கமிஷனின் அங்கமான பயன்பாட்டு மனித வள ஆராய்ச்சி மையத்தின் (Institute of Applied Manpower research) ஆய்வில் தெரிய வந்துள்ளது.

1991-ம் ஆண்டு துவங்கி 2012 வரையிலான கால அளவில் சுமார் ஒன்றரை கோடி விவசாயிகள் இல்லாமல் போயுள்ளனர். கடந்த பதினோரு ஆண்டுகளில் மட்டும் சுமார் 77 லட்சம் விவசாயிகள் விவசாயத்தை விட்டுவிட்டு காணாமல் போயுள்ளனர். திட்ட கமிஷனின் இந்த அறிக்கை, விவசாயம் சாராத துறைகள் உள்ளிட்டு, பொதுவாகவே புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்காத வளர்ச்சி தொடர்ந்து நீடித்து வருவதை சுட்டிக் காட்டியுள்ளது. முன்பு விவசாயத்தில் ஈடுபட்டிருந்தோர் பலரும் தற்போது பல்வேறு சேவைத் துறைகளுக்கும், விவசாயக் கூலிகளாகவும் இடம் பெயர்ந்துள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது.

1981-லிருந்து 1991 வரையிலான கால கட்டத்தில் விவசாயிகளின் (பயிர்த் தொழிலில் நேரடியாக ஈடுபடுவோர்) எண்ணிக்கை 9.2 கோடியிலிருந்து 11 கோடியாக உயர்ந்துள்ளது. உலகமயமாக்கல் அமல்படுத்தப்பட்டதற்கு பிந்தைய காலங்களில் தான் விவசாயிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த 22 வருட காலகட்டத்தில் நாளொன்றிற்கு சுமார் 2,035 விவசாயிகள் காணாமல் போயுள்ளனர் என்பது தான் அரசின் இந்த அறிக்கையில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது. இன்றைய நிலையில், கடந்து செல்லும் ஒவ்வொரு மணி நேரம் சுமார் 85 இந்தியர்கள் விவசாயத்திலிருந்து விலகிச் சென்ற வண்ணம் உள்ளனர். ஆக, இன்றைய தேதியில் மொத்த மக்கள் தொகையில் பயிர் தொழிலில் எட்டு சதவீதத்திற்கும் குறைவானவர்களே ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், அரசு வேறு ஒரு மோசமான புள்ளி விவரக் கணக்கை முன் வைக்கிறது. அதாவது, விவசாயத்தில் நேரடியான பயிர் தொழிலில் இல்லாமல், அதைச் சார்ந்த கூலி வேலைகள், கால் நடைகள் வளர்ப்பது உள்ளிட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளோரையும் சேர்த்து மொத்த மக்கள் தொகையில் 53 சதவீதம் பேர் விவசாயத்தில் இருப்பதாகச் சொல்கிறது. இவ்வாறு சொல்வதன் மூலம், கடந்த இருபதாண்டுகளில் நடந்துள்ள 2,70,940 விவசாயிகள் தற்கொலைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்துள்ளது.

விவசாயிகள் தற்கொலை என்பதை எவ்வாறு முடிவு செய்கிறார்கள்?
குறைந்தபட்சம் நிலம் வைத்து நேரடியான பயிர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின்

தற்கொலைகளை மட்டுமே விவசாய தற்கொலைகள் என்று மாநில குற்றப்பதிவு ஆணையம் கணக்குக் காட்டுகிறது. விவசாய கூலிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் தற்கொலைகளை கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. அரசு தரும் கணக்கின்படியே கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் சராசரியாக 62 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் இதனை மொத்த மக்கள் தொகையில் உள்ள விவசாயிகளின் சதவீதம் எட்டுக்கும் குறைவானது என்கிற திட்ட கமிஷன் அறிக்கையோடு பொருத்திப் பார்த்தால் நாம் எதிர் கொண்டிருக்கும் அபாயத்தின் பரிணாமம் புரிந்து கொள்ள முடியும். நாடு ஒரு பெரும் நெருக்கடியை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டேயிருக்கிறது.

விவசாயத்தில் அழிவு என்பது கொஞ்சம் நஞ்சம் இருக்கும் இறையாண்மையை முற்றாக இழக்கும் நிலைக்கு நம்மை தள்ளி விடும். இன்றைய தேதியில் மொத்த மக்கள் தொகையில் 72 சதவீதம் பேர் ஊரகப் பகுதியில் வசிக்கிறார்கள் என்கிறது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு. எனில், விவசாயத் துறையின் வீழ்ச்சியென்பது 72 சதவீதம் மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கக் கூடியது. இந்நிலையில் தான் ஒவ்வொரு ஆண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது.

விவசாயத்துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 90-களின் துவக்கத்தில் 13 சதவீதமாக இருந்தது தற்போது அது சுமார் 8 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

சேவைத்துறை

உலகமய தரகர்களுக்கோ இது குதூகலத்தின் காலமாய் இருக்கிறது. நாட்டின் நுகர்பொருள் கலாச்சாரம் அதிகரித்திருப்பது, ஒரு சிறு பிரிவினருக்கு சேவைத் துறையில் வளமான வேலைகள் கிட்டியிருப்பது, ஒரு புதிய மேல் நடுத்தர வர்க்கம் உதித்தெழுந்திருப்பது, நவீன மின்னணுப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் சந்தை விரிவடைந்திருப்பது மற்றும் இவற்றின் பயன்பாடு அதிகரித்திருப்பது உள்ளிட்டவைகளைச் சுட்டிக்காட்டும் இவர்கள், புதிய பொருளாதாரக் கொள்கைகளை விதந்தோதுகிறார்கள்.

இவ்வாறாக கொண்டாடப்படும் புதிய பொருளாதாரக் கொள்கைகள் நாட்டின் சுயேச்சையான பொருளாதாரக் கட்டமைப்பை சிதைத்துள்ளதோடு இதைப் பன்னாட்டு மூலதனத்துடன் நேரடியாக பிணைத்துள்ளது. தற்போது உலகளவில் முதலாளித்துவம் ஒரு கட்டமைப்பு நெருக்கடியைச் சந்தித்து வரும் நிலையில் அதன் பாதிப்புகளை இந்தியாவும் எதிர்கொண்டு நிற்கிறது. தற்போது ஆலைத் தொழில்துறையில் 2004-2007 காலகட்டத்தில் இருந்த 14 சதவீத கார்ப்பரேட் முதலீடு தற்போது 10 சதவீதமாக குறைந்துள்ளது என்கிறது வளர்ச்சி, இணக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கான தலாளிகள் சங்கம் (P.H.D Chambers). தொழில்துறை வளர்ச்சி என்பது அனேகமாக பூஜ்ஜியத்தை அடைந்து விட்டது என்று கண்ணீர் வடிக்கிறது அச்சங்கம்.

சேவைத் துறையில் பெரும் பங்காற்றும் ஐ.டி துறையோ தற்போது அமெரிக்காவின் தள்ளாட்டத்திற்கு தக்கவாறு ஆடிக் கொண்டிருக்கிறது. தொழில்துறையின் வளர்ச்சியும் தேக்கமடைந்து விட்டது. இச்சூழலில் விவசாயத்தின் அழிவும் அதைத் தொடர்ந்து கிராமப்

பொருளாதாரத்தின் வீழ்ச்சியும் ஊரகப் பகுதிகளில் இருந்து விசிறியடிக்கப்பட்டு நகரங்களில் அந்த கூலிக்காக குவிந்துள்ள மக்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. மீண்டும் கிராமத்துக்கே சென்று விவசாயத்தை மீளவும் துவங்குவது சாத்தியமற்றதாகி விட்ட நிலையில், நகர்ப்புறங்களின் சேரிகளிலும் நடைபாதைகளிலும் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத்தின் அழிவு, நாட்டின் உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறையையும் அதைத் தொடர்ந்து பஞ்சத்தையும் நோக்கி மெல்ல மெல்ல இழுத்துச் செல்கிறது. விவசாயத்திற்கும் உள்நாட்டுத் தொழில்துறைக்கும் துரோகமிழைத்து நாட்டை மீண்டும் அடிமையாக்கத் துடிக்கும் காரணிகளை உடனடியாக வீழ்த்தாவிட்டால் ஒட்டுமொத்தமாக ஒரு பெரும் அழிவை இந்நாடு சந்திக்க வேண்டியிருக்கும்.

**- க. சதீஷ்குமார்**, சோணாப்பேட்டை
மன்னார்குடி

தூக்கத்திற்கு விடை கொடுத்து துயில் எழுந்து....
கடிகாரத்தை பார்த்தேன்

தூக்கத்தை தொலைத்து ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது
காலங்கள் கடந்து கொண்டிருக்கிறது..

கடமை காத்திருக்கு என்று என்னை பார்த்து
ஏளனமாய் சிரிக்கும் நொடி முள்

பற்பசையால் பற்களுக்கு பளபளப்பு கொடுத்து
தேகத்திற்கு சொட்டுநீர் பாசன குளியலிட்டு
ஆடைகளுக்கு என் உடலை அடைக்கலம் கொடுத்து

அழகான சாப்பாட்டை அலங்கோலபடுத்தி விட்டு
சாலையோர சமிக்கைகளை சாமானியர்களுடன் கடந்து

அலுவலகத்தில் அடி வைக்கும் போது அரை மணிநேர தாமதம்
ஊழிய பிடித்தம்...

நிமிர்ந்து பார்த்தேன்..!
மீண்டும் என்னை பார்த்து சிரித்தது நொடி முள்...

**- மன்னை நகர் சிவா**

# சுமைலி (Smiley)



பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

இன்றைக்கு அனைவரது விரல்களில் அகப்பட்டும் மனதில் புதைப்பட்டும் கிடக்கும் உணர்வுகளுக்கான ஒரு அடையாளம் அல்லது குறியீடு என்றும் சொல்லலாம். உதாரணத்திற்கு பண்டைய காலத்தில் பயணம் செய்தவர்கள் அடுத்து வருவதற்கும், வருபவர்களுக்கும் ஒரு பொருள் தரும் உருவத்தை பாறைகளில் பதிவு செய்து சென்றார்கள். 1963 ல் ஒரு மஞ்சள் வட்டத்தை முகமாகவும் அதில் கண்கள்களாக இரு கரும்புள்ளிகளும் வாய் பகுதிக்கு வளைவான ஒரு வரியுடனும் அறிமுகமானது இந்த சுமைலி.

இன்று நமது பயன்பாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப 843 ஆக வளர்ந்து நிற்கிறது. இதில் கோபம், நக்கல், மகிழ்ச்சி, துக்கம், காதல், அன்பு என அனைத்து உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் அளவுக்கு அமைந்திருப்பதே இதன் சிறப்பு.

இவை ஒவ்வொருவரின் வாழ்கையிலும் எவ்வளவு மகிழ்ச்சியையும், துக்கத்தையும், ஏமாற்றங்களையும் கொடுத்திருக்கும் என்பதை அலசிவிட்டு வருவோம். இப்பொழுதுள்ள காலகட்டத்தை நாம் சுமைலிக்கு முன் சுமைலிக்கு பின் என்றே பிரிக்கலாம் அந்த அளவுக்கு இன்று நம் வாழ்க்கையுடன் ஒன்றி போய்விட்டது இந்த சுமைலி.

சுமைலிக்கு முன்...

ஒரு கருத்து பரிமாற்றமோ அல்லது உரையாடும் போதும் நம்முள் ஏற்படும் உணர்வானது நம் முகம் மூலம் வெளிப்படும் அப்போது அனைவரின் செயலும் நம் உணர்வுகளுக்கு ஒன்றியே இருக்கும். இது தான் இயற்கை.

உதாரணத்திற்கு சில நிகழ்வுகளை எடுத்துக்கொள்வோம்.

நண்பர்களிடம் பேசும் போது ஒருவரை ஒருவர் கிண்டல் செய்வது இயல்பு. நண்பனை கிண்டல் செய்யும் போது சில பட்டை பெயர் வைத்து கூப்பிடுவோம். அது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும் அவர் மட்டும் வருத்தமாக இருப்பார். பின் அதை பேசி சரி செய்துக்கொள்வோம். அத்துடன் அந்த நிகழ்வு முடிந்துவிடும்.

அதே போல் தான் காதலை காதலியிடம் பதிவு செய்யும் போதும். காதலை கடிதத்தில் எழுதி கொடுக்கும் போது இருக்கம் நடுக்கம் வார்த்தைகளால் சொல்ல இயலாது. அப்போது இருவர் முகத்திலும் தோன்றும் உணர்வுகளால் இருவருமே உண்மையை புரிந்துக் கொள்வார்கள்.

அதேபோல் நாம் கடிதத்தில் நம் கைகளால் தீட்டிய சொற்களும், வடிவங்களும் ஒரு தனிச்சிறப்புடையதாக இருக்கும்.

இதே போல் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் கோபம், வெட்கம், சிரிப்பு, அச்சம், அழுகை என அனைத்து உணர்வுகளையும் முகத்தால் வெளிப்படுத்தினோம்.

சுமைலிக்கு பின்...

இப்படி அனைத்து உணர்வுகளையும் முகத்தில் வெளிப்படுத்திய நாம் இன்று நம் கட்டை விரலிடம் தாரை வார்த்துவிட்டோம். ஆம், அது மட்டுமல்ல ஒரு சிலையாகவே தான் இருக்கிறோம். இது நம் மனதில் தோன்றியதை முகத்தால் வெளிக்காட்ட விடாமலும் செய்கிறது.

உதாரணத்திற்கு ஒரு நல்ல நகைச்சுவையான செய்தியை படித்துவிட்டு சத்தமாக சிரிக்க தோன்றும் ஆனால் நாம் ஒரு மருத்துவமனையில் உள்ளோம் என்று வைத்துக்கொள்ளுங்கள் அங்கே நம்மால் சிரிக்க முடியாது. ஆனால் அதற்கான உணர்வை வெளிப்படுத்தியே ஆக வேண்டும் கட்டை விரல் அதற்கான செயலை செய்கிறது. ஆனால் ஒரு உணர்வை இப்படி அடக்குவது சரியா தவறா என எனக்கு தெரியவில்லை.

இது மட்டுமின்றி பல ஏமாளிகளையும் ஏமாற்றுபவர்களையும் உருவாக்குகிறது. எப்படியென்றால், ஒருவருடன் சண்டை ஆனால் சமாதானம் செய்வது போல் சுமைலிகளை இடுவதால் அதை பார்ப்பவர் நம்பிவிடுவார். ஆனால் இவரோ மனதில் ஒன்றும் விரலில் ஒன்றும் வைத்திருப்பார்.

அதே போல் இந்த சுமைலி இல்லாத ஒரு செய்தியையும் நாம் படிக்க விரும்புவதில்லை. செய்திக்கு ஏற்ற சுமைலியை பயன்படுத்துவது உடலுக்கு உயிர் கொடுப்பது போன்ற ஒன்றாகிவிட்டது. நம் உணர்வுகளை என்ன தான் எழுத்தில் காட்டினாலும் அந்த சுமைலியில் காண தான் ஆசைப்படுகிறார்கள்.

இவ்வளவு ஏன்?
செய்தியை அனுப்ப தட்டச்சு செய்ய தெரியாதவர்கள் கூட இந்த சுமைலியால் தான் சொல்ல வந்ததை தெரிவித்து விட முடியும். அந்த அளவிற்கு புரிதலில் எளிமையாக விளங்குகிறது.

எனவே இந்த சுமைலி நம் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகவே மாறிவிட்டது. மகிழ்ச்சியான தருணத்தை துன்பமாகவும், கவலையான தருணத்தை இன்பமாகவும் மாற்றும் வல்லமை இந்த சுமைலிக்கு உண்டு என்பது மிகையாகாது.

எனவே இன்பமோ, துன்பமோ இரண்டுமே அதை கையாள்வதில் தான் உள்ளது. நாம் எழுதும், பேசும் மொழிகளுக்கு முன் இருந்த முறை இப்போது மீண்டும் சுமைலி மூலம் வெளிவருகிறது.

பள்ளிக்கு செல்லாமலே அடுத்தவர்களின் சுமைலி பதிவுகளை உணரலாம். மகிழ்ச்சியை விட வேறேதும் நம் வாழ்வை நிறைவு செய்ய முடியாது. அந்த வகையில் அனைவருடனும் மகிழ்வுடன் இருப்போம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**- பாலாஜி சுதந்திரராஜன்**

# தண்ணீர்



மனோ குணசேகரன்

நீரின்றி அமையாது உலகு

வரும் காலங்களில் மிகப் பெரிய போராட்டம், போர் என ஒன்று இருந்தால் அது தண்ணீருக்காக தான் இருக்கும். இன்றளவும் அதே, ஆனால் அதை தாண்டிய மிக கோர வடிவமாக கூட இருக்கலாம் வருங்காலம். அதை தடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இன்று உள்ளோம், அது நம் தலையாய கடமையும் கூட.

வருங்கால சந்ததிகளுக்கு சொத்து சேர்த்து வைப்பது மட்டும் போதாது, அவர்களின் வாழ்க்கைக்கு அதை தாண்டி ஒரு சுகாதரமான வாழ்க்கையை தர வேண்டும். அதை அழித்து விட்டு எதை அவர்களுக்கு கொடுக்க போகிறோம்? அதில் முக்கிய விடயமாக தண்ணீர் உள்ளது.

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினத்திற்கும் தண்ணீர் அத்தியாவசியமான ஒன்றாகும். நமக்குக் குடிக்க, சமைக்க, சுத்தம் செய்ய மற்றும் குளிக்கத் தண்ணீர் தேவைப்படுகிறது. நம் பாட்டன், முப்பாட்டன் பெரும் ஆறு ஏரி, குளங்களில் குளித்தார்கள். நம் தந்தை கிணறுகள், ஆறு, ஓடை, குட்டை குளம் என குளித்தனர். நாம் சிறு வயதில் தொட்டியில் குளித்தோம் தர்போது ஒரு வாளியில் முடிந்து விட்டது பலரின் குளியல்.

விவசாயம் செய்ய மற்றும் தொழிற்சாலைகள் இயங்க நமக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது.

பூமியில் எழுபது சதவிகிதம் தண்ணீரால் சூழப்பட்டுள்ளது என்பது நாம் அறிந்ததே, ஆனால் பூமியில் இவ்வளவு தண்ணீர் இருந்தாலும் ஒரு சதவிகித அளவு தண்ணீர்தான் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. மீதியுள்ள தண்ணீரெல்லாம் பனிக்கட்டிகள் மற்றும் கடலில் உள்ள உப்பு தண்ணீர் அதையும் குடிநீர் ஆக்கும் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அதில் சொல்லும் அளவு பயன் இல்லை.

இன்றைக்கு தண்ணீர்ப் பற்றாக்குறை என்கிற பிரச்சனை உலகம் முழுவதும் பெரும்பாலான மக்களால் எதிர்கொள்ளப்பட்டு வருகிறது. அதிலும் வல்லரசு நாடுகள் அவர்களது தேவைகளுக்கு வஞ்சகம் செய்து நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்து அவர்களின் தேவைக்கு ஏற்றால் போல் ஏழைநாடுகளில் வளர்ச்சிக்கு உதவுகின்றோம் என்ற போர்வையில் அந்நாட்டின் தண்ணீரை மறைமுகமாக கொள்ளை அடிக்கின்றனர்.

எவ்வாறு என்றால், ஒரு பொருளை உருவாக்க தேவைப்படும் நீரை, மறை நீரை கொண்டு சொல்லலாம். (ஒரு பொருளுக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்கு தெரியாத நீர் இதுவே மறை நீர். இது ஒரு தத்துவம், பொருளாதாரம். ஒரு நாட்டின் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவது

போல ஒரு நாட்டின் நீர்வளத்தை கொண்டு மதிப்பிடும் தண்ணீர் பொருளாதாரம். இதை கண்டுபிடித்தவர் இங்கிலாந்தை சேர்ந்த பொருளாதார வல்லுநர் ஜான் ஆண்டனி ஆலன். இந்த கண்டுபிடிப்பிற்காக ஸ்டாக்ஹோம் வாட்டர் -2008 என்ற விருது பெற்றவர்).

இந்த கொள்ளை இந்தியாவிலும் நடக்கின்றது என்பது எத்தனை பேருக்கு தெரியும்? நம்மில்.

நம்ம சென்னையில் பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு ஆண்டுக்கு லட்சக்கணக்கான கார்களைத் தயாரித்து அவர்கள் நாடு உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. ஏன்? அவர்களின் நாடுகளில் அவற்றை உற்பத்தி செய்ய முடியாதா? இடம்தான் இல்லையா? உண்டு. இங்கு மனித சக்திக்கு குறைந்த செலவு என்றால், நீர்வளத்துக்கு செலவே இல்லை. 1.1 டன் எடை கொண்ட ஒரு கார் உற்பத்திக்கான மறை நீர் தேவை நான்கு லட்சம் லிட்டர்கள்.

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருட்களில் 72% வேலூர் மாவட்டத்தில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் 2013-14ம் ஆண்டில் தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு 850 கோடி டாலருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து ஆண்டுக்கு சராசரியாக 5,500 கோடி ரூபாய்க்கு தோல் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

அன்னிய செலவாணி வருவாய் ஆண்டுக்கு சுமார் 10,000 கோடி ரூபாய். ஒரு எருமை அல்லது மாட்டின் ஆயுள்கால மறை நீர் தேவை 18,90,000 லிட்டர். 250 கிலோ கொண்ட அக்கால்நடையில் இருந்து ஆறு கிலோ தோல் கிடைக்கும். ஒரு கிலோ தோலை பதனிட்டு அதனை செருப்பாகவோ கை பையாகவோ தயாரிக்க 17,000 லிட்டர் மறை நீர் தேவை.

உள்ளாடை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது நம் தமிழ்நாட்டில் உள்ள திருப்பூர். பல கோடி செலவு செய்து செயற்கை கோள் தயாரிக்கும் வல்லரசு நாட்டுக்கு உள்ளாடை தயாரிக்க தெரியாதா? 250 கிராம் பருத்தி உற்பத்திக்கான மறை நீர் தேவை 2495 லிட்டர்கள். (இந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் இணையத்தின் மூலம் திரட்டப்பட்டது)

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதி. இன்றோ ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்க்கு தண்ணீர் இல்லை எனில் ஒரு கிராமத்தை அழித்திடு என்கிறது உள்நாட்டு, பன்னாட்டு பெரு நிறுவனங்கள். அதிலுள்ள அரசியலை சிந்தித்து பாருங்கள்.

இங்கு ஒரு பன்னாட்டு நிறுவனம் தொழிற்சாலை நிறுவுகின்றது என்றால் அதற்கு யார் துணை போகிறார். இங்கிருந்து என்ன வளங்களை கொள்ள அடிக்க போகிறார்கள் என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர்கள் சொல்லலாம் நாங்கள் ஆயிரம் பேருக்கு வேலை தருகிறோம் என. ஆனால் லட்சம் பேரின் வாழ்வாதாரங்களை மறைமுகமாக கொள்ளை அடிக்கப்படுகிறதே.

அதை விட கொடுமை குடிக்கும் தண்ணீர் விலை பொருளாக மாறிவிட்டது. தண்ணீர் தனியார்மயம் என்பது மறு குடியிருப்பு ஆதிக்கத்தின் (Colonization) கோர வடிவம் இது.

நாம் உயிர் வாழ வேண்டும் என்றால் இத்தனியார்மயத்தை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும். இங்கு ஏற்படும் தண்ணீர் பிரச்சனையை நேரடியாக சந்திக்க கூடியவர்கள் யார் நாம் தானே? ஆக என்ன செய்ய வேண்டும்?

இதை உணர்ந்து தண்ணீரை வீண் விரையம் செய்வது தடுக்கப்படவேண்டும் மழை காலங்களில் பெய்யும் மழைநீர் சேமிக்கப்பட வேண்டும். முக்கியமாக நீர்வள ஆதாரங்களைப் பாதுகாப்பதும் நீண்டகாலம் நீர் தேங்காமல் இருக்கும் ஏரி குளம் குட்டை கிணறுகளை மீட்டெடுத்து பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு முன்பாக நீர் நிலைகள் மீதான அனைத்து ஆக்கிரமிப்புக்களையும் உடனே அகற்ற வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை எடுக்க சரியான நேரம் இது. இல்லையெனில் எதிர்காலத்தில் ஏன் நாம் வாழும் காலத்திலேயே ஒவ்வொருவருக்கும் தண்ணீர் கிடைக்குமா என்பது கேள்விக்குறி. இன்று முதலே தண்ணீரின் முக்கியத்துவத்தை அனைவரிடமும் கொண்டு செல்வோம் குழந்தைகளுக்கும் இதன் மதிப்பை புரிய வைக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

அதன் மூலம் வரும் காலங்களில் தண்ணீர் தனியார்மயமாதலும் தடுக்கப்படும். தண்ணீர் என்பது பணக்காரன் பன்னாட்டு நிறுவனம் மட்டுமே ஆடம்பரமாக பயன்படுத்தும் விடயம் என்பது உடைக்கப்பட வேண்டும்.

நீரின்றி அமையாது உலகு. குறிப்பு தமிழக மக்கள் கவனிக்க வேண்டியது;

இன்றைய நிலையில் தமிழகத்தின் இயற்கை வளம் அழிக்கப்படுகிறது, ஏரிகள் கட்டுமான பகுதியாக பன்னாட்டு நிறுவனமாக ஆக்கிரமிக்கப்பட்டுகிறது, குளங்கள் காணாமல் போய்விட்டன. வளர்ச்சியின் பெயரால் மரங்கள் கணக்கில் அடங்கா அளவில் வெட்டப்படுகின்றன, கடத்தப்படுகின்றன.

மணல் கட்டுப்பாடே இல்லாமல் அள்ளிக்கொண்டு இருக்கிறார்கள். நிலத்தடி நீர் மட்டம் பல அடி தூரம் கீழே சென்று கொண்டு இருக்கிறது. நாம் ஒன்றை உணர வேண்டும், எவ்வளவு தூரம் தண்ணீர் கீழே போகுகிறதோ அந்த அளவிற்கு அது விசம், கனிமத் தண்ணீரே வரும். பிறகு அது மனிதனுக்கும் கெடுதல் விவசாய மண்ணுக்கும் கெடுதல் இரண்டையுமே மலடாக்க வல்லது. இது எல்லாவற்றையும் விட ஆண்டுக்கு ஆண்டு பெய்யும் பருவமழை குறைந்து கொண்டே வருகிறது.

எங்கும் மரம் இருந்தால் தானே மழை வரும், இங்குதான் காட்டை அழித்து கடவுளை காட்டுகிறார்களே, பிறகென்ன செய்வது?

இந்த அக்கறை அற்ற நிலை தொடர்ந்தால் தண்ணீர் பிரச்னையை தமிழகம் எதிர் கொள்ளும். இன்றைய நிலையை தாண்டி இன்னும் கோரமாக மாறும். இதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏன் என்றால் நமக்கென சீவநதி இல்லை, இருக்கும் தாமிரபரணியையும் பன்னாட்டு நிறுவனத்திற்கு பங்கிட்டு கொடுத்து விட்டனர். நாம் தண்ணீருக்காக முழுக்க முழுக்க அருகிலுள்ள மாநிலங்களையே நம்பி உள்ளோம். ஆனால் அதுவும் வரும் காலங்களில்

பிரச்சனையே. இன்று வரை காவிரி பிரச்சனை தீர்வே இல்லாமல் உள்ளது. மற்ற மாநிலங்களும் தண்ணீர் தர மறுக்கிறது. தடுப்பணைகள் கட்டப் போவதாக வஞ்சகம் செய்ய தொடங்கி விட்டன. இந்த நிலையில் கூட நாம் தண்ணீரின் முக்கியத்துவம் உணரவில்லை.

சரி அரசாங்கமாவது உணரும் என்றால் இது வரை எந்த வித உறுதியான நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெறும் அறிவிப்புகளாக மட்டுமே உள்ளது. வெளிப்படையான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மக்களின் தேவை அறிவிப்பு அல்ல தீர்வு. தண்ணீரை சேமிப்பதற்கான எந்த முழு முயற்சியும் அரசோ, அதிகாரிகளோ மேற்கொள்ளவில்லை பொது மக்களாகிய நாம் தான் குட்டைகள், குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் என அனைத்தையும் மீட்டெடுக்க வேண்டும்.

அரசாங்கம் செய்ய வேண்டிய இந்தப் பணிகளை சமூக நலசார் அமைப்புகள் பொதுமக்களின் உதவியுடன் சேலம், திருச்சி, கோவை, திருப்பூர், திருச்சி, தஞ்சை, மன்னார்குடி (சமீபத்தில் நம் மன்னையின் மைந்தர்கள் அமைப்பு மீட்டெடுத்த நம்மாழ்வார் ஏரி) போன்ற நகரங்களில் செய்து கொண்டு இருக்கின்றனர்.

இவர்களும் இவற்றை செய்யவில்லை என்றால், நிலைமை இன்னும் படு மோசமாக சென்று கொண்டு இருக்கும். தமிழக மக்களே உணருங்கள். தண்ணீர் இல்லாமல் ஒரு நாள் கூட வாழ இயலாது.

புரட்சியாளர் லெனின் சொன்னது நினைவிற்கு வருகிறது. இதுவரை வாழ்ந்தது போல இனிமேல் வாழவே முடியாது என்கிற நிலை வரும்போது தான் மக்கள் புரட்சி செய்வார்கள் என்று. தமிழக மக்களும் அப்போது தான் உணர்வார்கள் போல நீரின் முக்கியத்துவத்தை.

**- மனோ குணசேகரன்**
புள்ளவராயன் குடிகாடு, மன்னார்குடி

## ஆடிப்பெருக்கு

- ராஜேஷ், மன்னார்குடி

பொண்ணா விளைஞ்சது என்க பூமி
இப்போ பொணமா விழுகுது இங்க சாமி.

கட்டாந்தரையா காவிரியை
பாக்குறப்போ...

கண்ணீர் தான் பொங்குது
ஆடிப்பெருக்கா.....

# உள்ளூர் சந்தைதான் உலக சந்தை


இராசசேகரன் மன்னை

நம்மூரில் நாம் பிழைக்க முடியாது என்று சொல்லி தான் வெளியூர், வெளிநாடுகளுக்கு செல்கிறோம். ஆனால் எப்படி பன்னாட்டு நிறுவனங்கள் நம்மூரில் வந்து பணம் ஈட்டுகிறார்கள்? அவர்களின் பொருளை ஏன் சிறு சிறு கடைகளில் கூட விற்கிறார்கள் என்பதை உணர்ந்தால் நாம் நம் சந்தையை கொண்டே பிழைக்கலாம், வெளியூர், வெளிநாட்டிற்கு செல்ல அவசியமில்லை.

அவர்களின் கண்களுக்கு தெரிந்த சந்தை, நம் கண்களுக்கு தெரியாமல் போனது ஏன்???

பொருளாதாரம்
தனது உழைப்பு தனது வருமானம் என்றாகிவிட்டது. தனிமனிதனுக்கு இது சரி, ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு இது உகந்ததா.

தனிமனித வருமானம் நாட்டின் பொருளாதாரம் தொடர்வண்டி தண்டவாளத்தை போல கட்டமைக்கப்படுவதால் இந்த சிக்கலில் சிக்கி நாட்டின் பொருளாதாரம் சிதைகிறது. நாட்டின் பொருளாதாரத்தை சமன் செய்வதாக நினைத்து தேவையில்லாத வரி விதிப்புகள் தனிமனித வருமானம் எவ்வளவாக இருந்தாலும் அவர்களின் பொருளாதாரம் சிதைகிறது.

பொருளாதாரம் என்பது என்ன? வெறும் இலாபம் பார்ப்பதா இல்லை செலவை சமன் செய்து கூடுதலை பார்ப்பதா? இரண்டுமே இல்லையே.

குறைந்த முதலீடு, தேவையான உழைப்பு, பரவலான சந்தைகள், கனிசமான இலாபம், ஏற்றத்தாழ்வற்ற பணப்புழக்கம், எளியவர்கள் வரியவர்களாக வேண்டும், வரியவர்கள் நிலைப்பெற வேண்டும் இது தானே பொருளாதாரமாக இருக்க வேண்டும்.

இதில் நமது மண்ணில் எது குறைகிறது? அனைத்துமே இருப்பதால் தானே. பாடினான் பட்டுக்கோட்டையான் என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையேந்த வேண்டும் அயல்நாட்டில் ஒழுங்காய் பாடுபடு வயற்காட்டில் உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில் என்று பாட்டிற்கு கைத்தட்டிவிட்டு கருத்தை கைக்கழுவியதால் இன்று அயல்நாட்டிலும் அயல்நாட்டு நிறுவனங்களிலும் அடிமையாக உழைத்து அவர்களை செழிப்பாக வாழவைத்து நாம் செதிலாக தேய்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதற்கு அடிப்படை காரணம் நமது உள்ளூர் வியபாரம், உழவு சார்ந்த வாழ்வியல், நெசவு தொழில், மீன்பிடி தொழில் என்று நமது தற்சார்பை இழந்தது க்கிய காரணமாக உள்ளது.

உதாரணத்திற்கு நாட்டின் முதுகெலும்பு என்று உழவை கூறிவிட்டு நிமிர்ந்து நிற்க தூணாக இருக்க வேண்டிய முதுகெலும்பை உடைக்கும் அனைத்து வேலையுமே நடக்கின்றது.

வாழ்வியலாக வளமாக இருந்த உழவு இன்று உளவால் உலர்ந்து வறண்டு வறுமையில் அழிகிறது.

உழவிற்கு உகந்த மிகப்பெரிய நிலப்பரப்பு உள்ளது. தேவைக்கு அதிகமான மக்கள் சக்தி உள்ளது. ''மாடுகள் வீட்டின் செல்வமாகவும் இருந்தது'' அதன் சாணம் உரமாக இருந்தது, போக்குவரத்துக்கும் பயன்பட்டது. அதனால் ஏற்படுகின்ற செலவும் குறைந்தது.

மேலும் நீரியல் மேலாண்மையில் மேலோங்கி இருந்ததால் ஆறு, ஏரி, குளம், வாய்க்கால் மற்றும் கிணறுகள் என்று நீரை பாய்ச்சியும் சேமித்தும் வைத்திருந்ததால் அதற்கான செலவும் குறைவு. மொத்தத்தில் முதலீடு குறைவு இலாபம் அதிகமாக இருந்தது, அதனால் அன்று ஒரு மூட்டை நெல்லை விற்று ஒரு பவுன் தங்கம் வாங்கினார்கள். ஆனால் இன்று வளர்ச்சி நவீன முறை என்று கூறி உழவின் முதலீடு அதிகமானது. அதே நேரத்தில் விற்கும் விலையும் குறைந்ததே பேரிழப்பு. இதனால் பத்து மூட்டையை விற்றாலும் ஒரு பவுன் தங்கம் வாங்க முடிவதில்லை.

அன்று உழவில் வரும் இலாபத்தை அவர்கள் ஆற்றில் விடவில்லை விட்டதுமில்லை. அதை கொண்டு வீடு கட்டுவது வண்டி வாகனங்கள் வாங்குவது துணிமணிகள் எடுப்பது என்று தான் செலவு செய்ய போகிறார்கள். இதனால் அது சார்ந்த தொழிலும் அத்தொழிலை சார்ந்த தொழிலாளர்களுமே வளர போகிறார்கள்.

அதே போன்று சோடா நிறுவனம், கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய், முறுக்கு என்று பரவலாக பல தொழில்கள் சிறப்பாக செயல்பட்டு உள்ளூர் பொருளாதாரம் வலுவாக இருந்தது. அதை சார்ந்து பல குடும்பங்கள் பொருளாதார தன்னிறைவில் மகிழ்ந்திருந்தனர்.

ஏன் இவ்வளவு, ஒரு தெருவுக்கு இரண்டு தையல்காரர்கள் இருந்தார்கள். இந்த நொடி சிந்தித்து பாருங்கள். உங்களுக்கு மிக அருகில் தையல் கடை எங்குள்ளதென்று நினைவுக்கு வராது, அந்தளவிற்கு ஆயத்த ஆடைக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டோம்.

ஆயத்த ஆடைகள் தயாரிப்பது, நமது மண்ணில் பயன்படுத்துவது, நமது நீரை, மின்சாரத்தை எடுத்துக்கொள்வது. இத்தனையையும் நாம் இழந்தாலும் இலாபம் என்னவோ அன்னிய நிறுவனங்களுக்கு தான். இந்த இலாபத்தை அடைய அவர்கள் செய்வது விளம்பரம் மற்றும் அவர்கள் நிறுவனத்தின் முத்திரை இரண்டு மட்டுமே இந்த இரண்டையும் செய்ய அனுமதித்ததால் தெருவுக்கு இரண்டு குடும்பங்கள் அழிந்தது.

ஏன் இவ்வளவு, மனிதனின் அடிப்படை தேவையான தண்ணீரை கூட விற்பனையாக்கி காசாக்குகிறான், வேடிக்கை தான் பார்க்கிறோம். நமது நீர்வளம் சிதைகிறது என்ற எந்த குற்றவுணர்வும் இல்லை அதே நேரத்தில் நிலத்தடி நீரின் கருவறையான ஆற்று மணலையும் அழிக்கிறார்கள். அதைப்பற்றியும் கவலை இல்லை இதெற்கெல்லாம் என்ன காரணம் இருக்க முடியும்?

இப்பொருளாதாரம் நம்மை மட்டுமே சுற்றி பரிமாற்றம் நடந்ததால் அனைத்து தொழில்களின் வளர்ச்சியும் அதை சார்ந்த குடும்பங்களின் வளர்ச்சியும் மேலோங்கி இருந்தது.

இப்படி வளமாக கடந்த வாழ்க்கை, வளர்ச்சி, நாகரீகம், தூய்மை என்ற பெயரில் நமது வீட்டு வரவேற்பறையில் இருந்த தொலைக்காட்சி பெட்டியின் கண்ணசைவில் நாம் செயல்பட்டதன்

விளைவு நமது உள்ளூர் தயாரிப்புகளை விடுத்து கவர்ச்சியான பன்னாட்டு விடயத்தை தேடிச் சென்றோம்.

அவன் காற்றையும் அடைத்து வைத்து தனது வர்த்தகத்தை பெருக்கி கொண்டான். இதன் விளைவாக உள்ளூர் சந்தை அழிந்தது, தொழிலாளர்களின் பொருளாதாரம் சிதைந்தது.

இதன் விளைவாக அன்னியர்களிடம் அவர்களின் அடிமைகளிடம் வணிகத்தை இழந்து இடப்பெயர்வு கூலிக்கு வேலை என்று பன்னாட்டு நிறுவனங்களுக்கு அடிமையாகி போனோம். அவர்கள் நமது நிலத்தை அழித்து இயற்கை வளங்களை சிதைத்து காற்றை மாசாக்கி நமது அபரிவிதமான உழைப்பையும் சுரண்டி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி கொள்கின்றனர். அதே நேரத்தில் நமது மண்ணின் மக்களின் அனைத்து கட்டுமானங்களையும் அழித்தனர்.

போர்க்களத்தில் எதிரியை எதிர்ப்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு அவனின் பலத்தை சிதைப்பதும் அவனது ஆயுதத்தை அபகரிப்பதும் அதை கொண்டு தன்னை பலமாக்கி கொள்வதும் முக்கியம். அதை தான் பன்னாட்டு நிறுவனங்கள் நம் மீது போர் தொடுத்து கொண்டிருக்கின்றனர். நாம் இதை உணராமல் அவர்களின் வலையில் விழுந்து வலுவிழந்து வருகின்றோம்.

உலக நாடுகள் ஏன் இங்கு வலைவிரிக்கின்றன? இங்கு தான் அதிக அளவில் நிலப்பரப்பு உள்ளது. தேவையான நீர் கிடைக்கிறது. தனது சூழலை பாதுகாத்துக்கொள்ளும் அளவிற்கு விழிப்புணர்வு இல்லை. தடையின்றி மின்சாரம் கிடைக்கிறது. தரக்கட்டுப்பாடு என்ற ஒன்று கிடையவே கிடையாது. மக்களின் அழிவை விட நிறுவனத்தின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதிவிலக்குகள் பொதுவிதியாக உள்ளது. இது அனைத்தையும் கடந்து அளவுக்கு அதிகமான மக்கள் சக்தி உள்ளது.

ஆக அவர்களின் முதலீட்டு செலவு குறைகிறது. அதிக இலபாம் கிடைக்கிறது இதுவே முக்கிய காரணிகளாக அமைகின்றது.

இந்த நிலை உருவாக காரணம் என்ன? சற்று ஆழமாக சிந்தித்தால் அன்றைய காலங்களில் எவரும் வெறும் இலாப நோக்கில் மட்டுமே தொழில் செய்யவில்லை தரத்தின் அடிப்படையில் நம்பகத்தனத்தோடு தொழில் செய்தார்கள்.

அன்று துணி எடுக்க வேண்டுமா முதலியார் கடையில் எடுக்கலாம், தரமாக இருக்கும். எண்ணெய் வேண்டுமா? செட்டியாரிடம் வாங்கலாம் தூய்மையாக இருக்கும். பலசரக்கு சாமான்கள் வாங்க வேண்டுமா? அண்ணாச்சி கடையில் வாங்கலாம், நன்றாக இருக்கும்.

இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு கடை என்று அவரவர் சிந்தனைக்கு பழக்கவழக்கங்களுக்கு தகுந்தாற்போல் வர்த்தகம் செய்தனர். தொழில் நன்றாக இருந்தது சமூக ஒற்றுமையும் உதவும் மனப்பாங்கும் விட்டுக்கொடுக்கும் இயல்பும் இருந்தது.

வட்டித்தொழில் கூட நடவுக்கு பணம் பெற்று வட்டியோடு அறுவடை முடிந்து கடனை அடைத்தனர். இன்று இது நடக்குமா? நடக்காது?? அந்தளவிற்கு நம்பகத்தன்மை

சிதைக்கப்பட்டுள்ளது. இதனால் வட்டி கூட குட்டிப்போடுது. குட்டிக்கு வட்டி போடுறான் அந்த அளவிற்கு சிந்தனை சிதைந்துள்ளது

இதன் விளைவாக இன்று முதல் போட்டவரெல்லாம் முதலாளி, விளம்பரம் செய்பவரெல்லாம் வியாபாரி. யார் எவர் என்ற எந்த அடையாளம் இன்று இல்லை. பொருளின் தரம் தேவையில்லை, விலை மலிவாக இருக்கிறதா என்ற சிந்தனை மட்டுமே.

இதனால் எவரும் எங்கேயும் தொழில் செய்யலாம். ஆனால் உண்மையாக நேர்மையாக மட்டும் செய்துவிட கூடாது. அந்தளவிற்கு பகுத்து பார்க்க கற்றுத்தருகிறேன் என்ற பெயரில் அனைத்தையும் கேள்வியாக்கி விடைகளை தேட வைத்துவிட்டனர். விடைத்தேடும் இடைவெளியில் அன்னியனும் தொழில் செய்ய ஏதுவான சூழலை உருவாக்கி விட்டனர்.

இதன் விளைவாக மண்ணின் மைந்தர்களோ இதையெல்லாம் பயன்படுத்த தவறி அன்னியர்களிடம் தாரைவார்த்ததால் அன்றாட வாழ்விற்கு தகிடுதத்தோம் போடுகின்றோம்.

இதிலிருந்து மீள ஒரே வழி இன்றைய மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் இருந்து மாற்றி உள்ளூர் சந்தைகளை கைப்பற்றும் தற்சார்பு பொருளாதாரத்தை உருவாக்குவதே.

அதாவது ஒரே இடத்தில் உருவாக்கப்படும் அதிகமான உற்பத்தி அல்ல, அதிகமான இடங்களில் உருவாக்கப்படும் மிக அதிகமான உற்பத்திகள், அதை சந்தைப்படுத்த தெளிவான முகவர்கள், எளிதில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் விளம்பரங்கள்.

இவை தான் அன்னிய நிறுவனங்களை வாழவைக்கின்றன. இந்த அறியாமையை நாம் அகற்றினால் இயலாமை ஒழியும். பிறகு தெளிவாக திட்டமிட்டால் நமது பொருளாதாரம் நமது கையில்.

இவையெல்லாம் முடியுமா என்ற சந்தேகம்  நெல் முனையளவு கூட நமக்கு தேவையில்லை. இந்த வசதிகள் அனைத்தும் நம்மை சுரண்டுபவர்களுக்கு கிடைக்கிறது என்றால் நமக்கும் கிடைக்கும்.

அவர்களுக்கும் நமக்கும் ஒரே வேறுபாடு தான் உள்ளது. அவர்களுக்கு அமைத்து கொடுக்க இங்கே அடிமைகள் உள்ளனர். நாம் நாமாகவே அமைத்து கொள்ள வேண்டும். நாம் தான் அதை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

அதுவும் இன்றைக்கு அளவுக்கு அதிகமான இளைஞர்கள் படித்து முடித்து சரியான வேலைகள் இல்லாமல் தவறான வழியை நோக்கி பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிக ரித்து வருகிறது. இவர்களுக்கான சரியான வடிகாலாக சில வழிமுறைகளை வகுக்க வேண்டும். அதுவே அவர்களுக்கு நம்பிக்கையை கொடுத்து வாழ்வியல் முறை மாற வழிவகுக்கும்.

இப்படி ஒரு வளமான பொருளாதாரம் அமைந்தால் மட்டுமே தன்னுரிமை பெற்ற இனமாக உலக அரங்கில் உயர முடியும்.

நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், நாம் இழந்து கொண்டிருப்பது நமது பொருளாதாரத்தை மட்டுமல்ல, நமது வாழ்வியலை, நமது பண்பாட்டை, நமது பாரம்பரியத்தை, நமது சுற்றுச்சூழலை, நமது பூமியின் கீழுள்ள வளங்களை என அனைத்தையும் இழக்கின்றோம்.

அனைத்தையும் மீட்டெடுக்க நமது பொருளாதாரத்தை மீட்போம், அன்னிய சுரண்டல்களை ஒதுக்கிய தற்சார்பு பொருளாதாரத்தை வளர்த்து தன்னுரிமை பெற்ற தமிழ்நாட்டை கட்டமைப்போம்.

பொருளாதாரமே வாழும் பொருளின் ஆதாரம்.

உள்ளூரில் உள்ள கடைகளில் என்று உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அதிகமாக விற்கப்படுகிறதோ அன்றே நாம் உள்ளூரில் இருக்க முடியும். இல்லையென்றால் நம் பொருள்களை அகற்றியது போல் நம்மையும் விரைவில் அகற்றுவார்கள். அதற்கான வேலை ஏற்கெனவே நடைபெற தொடங்கிவிட்டது.

விழித்து கொண்டோரெல்லாம் பிழைத்து கொண்டார்கள். நாம்???

**– இராசசேகரன்**, மன்னார்குடி



வர்ணம்
கா.கரண் யுதன்தேவ்

# செல்லப்பிராணிகள்



அ. பிரவீன் குமார்
மன்னார்குடி

மனிதன் தோன்றுவதற்கு முன்பே இவ்வுலகில் வாழ்ந்தவைகள் விலங்குகளும், பறவைகளும். மனிதன் தோன்றலுக்கு பின் இவைகளை நம் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றிக்கொண்டோம்.

பொதுவாக விலங்குகள் அனைத்தும் காட்டில் வாழ்ந்தவை இவைகளை நாம் நம் தேவைக்காக வீட்டு விலங்காக மாற்றிக்கொண்டோம். அதில் சில ஆடு, மாடு, எருமை, நாய், பூனை, முயல், பறவை வகைகளில் சில காலப்போக்கில் இந்த விலங்குகள் நம்முடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டது.

நம் குழந்தைகளை செல்லம் என்று சொல்வது போல் வீட்டில் வளர்க்கும் விலங்குகளை கூட செல்லமாக பெயர் சூட்டி அழைக்கிறோம்.

வீட்டு விலங்குகளில் அதிகம் அனைவராலும் விரும்பி வளர்ப்பது நாய்கள் தான் ஏன் என்றால் இவை நம்முடன் மிக நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டது.

நம் மனதில் நினைப்பதை செய்யும் அளவிற்க்கு தன்னை வடிவமைத்துக்கொண்டது. நாய்களை அனைவரும் விரும்ப காரணம் நன்றியுடன் இருப்பதே. ஒரு முறை நாம் ஒரு நாய்க்கு உணவளித்துவிட்டால் அவை அதை மறப்பது இல்லை. 10 ஆண்டுகள் கழித்து நம்மை பார்த்தாலும் வாலை ஆட்டிக்கொண்டே நம் அருகில் வரும்.

நாய்களின் அறிவு திறமை அதிகம் எனவே தான் இவைகளை காவல்துறை மற்றும் இராணுவத்திலும் பயன்படுத்துகிறார்கள். நாம் காலையில் வேலைக்கு சென்று மாலையில் வீடு திரும்பும் போது நம்மை முதலில் வரவேற்பது இவைகளே.

அவைகளின் பாசத்தை வெளிப்படுத்த தாவுவதும், குதிப்பதும், குரைப்பதும், நம்மை அதன் நாக்கால் நக்கி கொடுப்பதும் இவ்வாறு இவைகள் செய்வதால் வேலைக்கு சென்று வந்த உடல் சோர்வும் மனச்சோர்வும் இல்லாமலேயே போய்விடும்.

சில நேரங்களில் தன்னை வளர்த்தவரை காப்பாற்ற பிற விலங்குகளிடம் ஏன் மனிதர்களிடம் சண்டையிட்டு தன் உயிரையே தியாகம் செய்திருக்கின்றன. நம் எல்லை சாமி, குலதெய்வம் என்று சொல்லும் வீரனார், அய்யனார் போன்ற எல்லை சாமிகளும் நாய்களை வேட்டைக்கும் காவலுக்கும் பயன்படுத்தியதற்கு சான்றாக அவர்களில் சிலைக்கு அருகில் கம்பீரமான தோற்றத்தில் நாய்களின் சிலையும் இருக்கும். இராசராச சோழன் போர் படையில் கூட நாய்களும் இருந்துள்ளது.

இதற்கு சான்று தஞ்சை பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டுக்களிலும் சுவரோவியங்களிலும் உள்ளன. இதில் இருந்த நாய்களின் சிறப்பும் பெருமையும் தெரிகிறது. நான்கு வருடங்களுக்கு முன்பு அரபு நாட்டில் குப்பையில் வீசப்பட்ட, பிறந்து மூன்று

நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை தெரு நாய் பார்த்து அந்த குழந்தையை தன் வாயால் கவ்வி அருகில் இருந்த வீட்டின் வாசலில் எடுத்து கொண்டு போய் போட்டு வீட்டின் முன் குலைத்து உரிமையாளர் வரும் வரை காத்திருந்து அந்த குழந்தையின் உயிரை காப்பாற்றி இருக்கிறது.

ஏன் ஒரு சில மாதங்களுக்கு முன்பு சென்னைக்கு அருகில் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத இடத்தில், ஒரு பெண் சமூக விரோதிகளால் அவர் தங்கி இருக்கும் விடுதி வாசலின் முன் கத்தியால் தாக்கப்பட்டார். அப்போது அங்கு இருந்த இரண்டு தெரு நாய்கள் அந்த வாலிபரை கடித்து அந்த பெண்ணை காப்பாற்றியது ஒட முயன்ற அந்த கயவனையும் பிடித்து பொது மக்களிடம் ஒப்படைத்தது.

வீட்டில் நாய்கள் வளர்ப்பதால் அவை நம் குடும்பத்தில் ஓர் உறுப்பினராகவே மாறிவிடுகிறது. நாம் அவைகளுடன் நேரம் செலவிடுவதால் நம் மனநிலை அமைதி பெறுகிறது.

அறிவியல் ரீதியாக பார்க்கையில் செல்லப்பிராணிகள் வளர்ப்பதால் அவர்களுக்கு இரத்த அழுத்தம், மன அழுத்தம், உடல் சோர்வு, தனிமையான உணர்வு இது போன்ற நோய்கள் வருவது இல்லை என்று ஓர் ஆராய்ச்சி சொல்கிறது.

குறிப்பாக பறவைகள் வீட்டில் வளர்ப்பதால் அவை இடும் கூச்சல் காதுக்கு இனிமையாகவும் மன அழுத்தம், இரத்த அழுத்தம், இதய பலவீனம் இவைகளை தடுக்கிறது.

வீட்டில் வண்ணமீன்கள் வளர்ப்பதால் அதை பார்க்கும் போது மன அமைதி கிடைக்கிறது வீட்டில் நல்ல சூழல் உருவாகிறது.

வீட்டில் நாய்கள் வளர்ப்பதால் வீட்டில் தனியாக இருக்கும் பெண்களுக்கு வயதானவர்களுக்கும் ஓர் நல்ல பாதுகாப்பாகவும் துணையாகவும் அமைகிறது. அவர்களின் தனிமை உணர்வையும், தனிமையின் அச்சத்தையும் செல்ல பிராணிகள் குறைக்கின்றது அல்லது தடுக்கின்றது.

- மன்னை **அ.பிரவீன் குமார்**
விலங்குகள் நல ஆர்வலர்
மற்றும் செல்லபிராணிகள் விற்பனையாளர் (Jillupets)

# உணர்



மரபு
மொழி
கலாச்சாரம்
கலை
இலக்கியம்
அடையாளம் அனைத்தையும் தொலைத்துவிட்டோம்

ஆனால் நாம் பேசுவதோ வீரவசனம்
நான் தமிழன் என்றும் நாம் தமிழர் என்றும் சொல்வது
வெட்கக்கேடு...

கொள்ளையனுக்கு கொடி பிடித்தோம்
அயோக்கியனிடம் - ஆட்சி
அதிகாரத்தை கொடுத்தோம்
கூத்தாடிக்கு காத்தாடியானோம்

ஆயிரத்துக்கும், இரண்டாயிரத்துக்கும்
உரிமையை விற்றுவிட்டு - இன்று
உரிமைக்காக போராடுகிறோம்

இதுதானே நாம் செய்த சாதனை
நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை (தமிழரை) நினைத்துவிட்டால்
என்று அழகாக பாரதி
அன்றே சொல்லிவிட்டார்

இனியேனும் மாற்றத்தை நோக்கி பயணிப்போம்..

போராட்டகளம் தமிழரின் விளையாட்டு மைதானம்
போராட்டம் தான் தமிழரின் வீர விளையாட்டு

புறப்படுங்கள் தோழர்களே..
இழந்ததை மீட்போம், மீட்டதை காப்போம்..

வெற்றி வெகுதூரம் இல்லை
வெற்றி நமதே ....

- ஜெ. பாரதிராஜா, பைங்காநாடு

# யார் திறமையானவர்கள்?



மன்னை ராம்

இன்றைய மக்களின் பார்வையில் யார் திறமையானவர்கள் என்றால் கை நிறைய பணம் சம்பாதிப்பவர்களே திறமையானவர்கள் என்பர்.

குறிப்பாக படித்து முடித்தவுடன் வெளியூர் அல்லது வெளிநாடு சென்று சம்பாதிப்பவர்களே திறமையானவர்கள் ஆகின்றனர்.

சொந்த மண்ணில் குறைந்த சம்பளத்திலோ அல்லது சொந்தமாக பணி செய்து குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் கையாலாதவர்கள், திறமையற்றவர்கள் என்றே முத்திரை குத்தப்படுகிறார்கள்.

அந்த நபர்கள் சமூக பணியில் ஈடுபடுபவராக இருந்தால் போதும் என்னென்ன அவமதிப்பை தர இயலுமோ அவை அனைத்தையும் அவர்கள் மேல் வாரி தெளிக்கப்படும்.

சமூகத்தை குறை சொல்லி பயன் இல்லை, நம் வீட்டிலும் அதே நிலைமை தான்.

நாம் சுயமாக ஒரு வேலை செய்வதாக முடிவெடுத்து அதை நடைமுறைப்படுத்தும் காலத்திலேயே வேறு எங்கோ ஒரு நபர் வெளிநாடு சென்று முதல் மாத வருமானத்தை அனுப்பி இருப்பார். அவ்வளவுதான் நம் வீடு இரண்டாக மாறிப்போகும்.

குறிப்பாக சமூகம் சார்ந்த பிரச்சனைகளில் செயல்படுபவர் என்றால் அவர்கள் நிலை சொல்லில் வடிக்க இயலாது.

தமிழகத்தில், தினம் தினம் ஒரு போராட்டம்

மீத்தேன், காவிரி, நீர்நிலை பிரச்சனை, சல்லிகட்டு, நீட் தேர்வு, தற்போது நெடுவாசல், கதிராமங்கலம் என நம் வாழ்வாதாரத்தை பாதிக்க கூடிய பட்டியல்கள் நீண்டு கொண்டே செல்லும்.

இத்தனை பிரச்சனைகளையும் மனதில் கொண்டும் பல போராட்டங்களில் கலந்து கொண்டும் அதே நேரத்தில் தன் பொருளாதாரத்தையும் குடும்ப நலன்களையும் கவனித்து கொண்டு இருக்கும் நபர்கள் நம் சமூகத்தின் பார்வையில் வேலை வெட்டி இல்லாத திறமையற்றவர்களாக ஆகி போகிறோம்.

வீட்டில் போராட்டம் என்றாலே ஒரு வித அச்ச உணர்வினாலே நம்மை பங்கெடுக்க விடுவது இல்லை. அப்படி ஆகிவிட்டது, ஆக்கபட்டது, நம் தமிழகத்தின் நிலை! அப்படி ஓர் போராட்டம் நடைபெற்றாலும் குறைந்தபட்ச நபர்களே பங்கெடுக்கிறோம்.

இளைஞர்கள் இணைய வழியில் செய்யும் புரட்சிகளை ஒரு சதவீதம் கூட களத்தில் செய்ய விரும்புவது இல்லை.

இவற்றை எல்லாம் பார்த்து கடந்து போராட்டம், விழிப்புணர்வு நிகழ்வுகளில் கலந்து கொள்வதாலோ என்னவோ மக்களின் பார்வைக்கு நாங்கள் திறமையற்றவர்களாக ஆகி போகிறோம்.

ஏதோ ஓர் அயர்ச்சியில் அல்லது மறதியில் சில வீட்டு வேலைகளை செய்யாமல் இருப்போம்.

அதற்கு வரும் முதல் கேள்வியே... ஊருக்கு என்றால் ஓடுவாய், வீட்டுக்கு என்றால் செய்யமாட்டாயா என்று.

ஊரில் தானே நம் வீடும் அடங்கி உள்ளது. அங்கு செய்யும் நன்மைகள் நம் வீட்டிற்க்கும் சேர்த்து தானே, ஏனோ அவர்களுக்கு இது புரிவது இல்லை.

இதை படித்து கொண்டு இருக்கும் வெளியூர், வெளிநாட்டில் பணி புரியும் தோழர்களுக்கு கேட்க தோன்றும். ஏன் எங்களுக்கு சிரமம் இல்லையா? எங்களுக்கு மக்கள் மீது நலன் இல்லையா? என்று.

நிச்சயமாக உங்கள் கேள்விகளுக்கு மறுப்பு ஏதும் சொல்ல மாட்டேன். வெளியூர், வெளிநாடுகளில் அல்லும் பகலும் உழைத்து, உணவின்றி, உறக்கம் இன்றி உவர் நீர் குடித்து வாழும் உங்கள் மனவேதனைகளையும் அறிவேன் தோழர்களே. நீங்களும் வெளியில் இருந்து தங்களால் இயன்ற அனைத்து உதவியையும் போராட்டத்திற்கு வழங்குகிறீர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆனால் எனது ஆதங்கம் இந்த மக்களின் பார்வையின் மீதே தவிர உங்கள் மீது அல்ல.

எனது தலைப்பிற்கான பதிலை நான் இறுதி வரை சொல்லவில்லை என்று உங்களுக்கு தோன்றலாம்.

இந்த கட்டுரையை படிக்கும் மக்களாகிய உங்கள் பார்வைக்கே இதன் விடையை விட்டு செல்கிறேன். நீங்கள் தான் சொல்ல வேண்டும் யார் திறமையானவர்கள் என்று !!!!!!

**- மன்னை ராம்**

# அரசியல் கற்போம்



மன்னை ரஞ்சித்

இளைஞர்கள், இளைஞிகள் அரசியலும் அதை சார்ந்த அறிவும் வளர்த்துக்கொள்ள வேண்டும் ஏன்....

முன்பெல்லாம் அரசியல் விவாதம் என்பது மேடையில், பொது இடத்தில், பெரும்பாலான தேநீர் கடையில் பேசப்பட்டு வந்தது. அங்கே பேசியவர்கள் எல்லாம் நம் தாத்தாவோ அப்பாவோ போன்றோர்கள் தான் அதுவும் குறைந்த பேர்களே. ஆனால் இப்போது சமூக வலைதளங்களில் 90% பேச்சுகள் அரசியல் விவாதமே.

அதாவது சமூக வலைதளங்களில் அதிகம் பயன்படுத்தும் நாம் நிச்சயம் அரசியல் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் என்பது வாக்கு பிரச்சாரம் மட்டுமல்ல நம் அன்றாட சமூகத்தில் நம்மையும், நம் பொருளாதாரத்தையும் சுற்றி நடக்கும் ஒவ்வொரு செயலும் அரசியல் சார்ந்ததே.

உதாரணமாக அணு உலையை எடுத்துக்கொண்டால் ஒரு தரப்பினர் அது ஆபத்து என்று ஆதாரமான தகவல்களை கொடுத்தாலும். மற்றொரு தரப்பு அது நாட்டின் நன்மை, வளர்ச்சி என கண்மூடித்தனமான தகவல்களை முன்வைத்தே தான் சொல்ல வரும் செய்தியை சரி என முன் நிறுத்துகின்றனர்.

இப்போது நடந்த நிகழ்வை எடுத்து கொண்டாலும் பழைய பணம் செல்லாது என அறிவித்ததும் ஒரு தரப்பு இந்தியா வல்லரசு ஆகிவிடும் கருப்பு பணம் ஒழிந்துவிடும் என்றே சொல்லிக்கொண்டு இருந்தனர். ஆனால் நாம் தெளிவாக சிந்தித்தப் போதுதான் இது பணமதிப்பு இழப்பு, பொருளாதார பின்னடைவு என முடிவுக்கு வந்தோம்.

இதே போல்தான் மீத்தேன் என்றால் ஏதோ ஒரு திட்டம் என மட்டுமே தெரிந்த நமக்கு, அதனால் நம் பொருளாதார, வாழ்வியல் பிரச்சனையை தெரிந்து கொள்ளவில்லை. இந்த பிரச்சனை ஏதோ காவேரி படுகை மாவட்டத்துக்கு மட்டுமான பிரச்சனை என நாம் நினைப்போம்.

ஆனால் இது மொத்த தமிழ்நாட்டுக்கே ஏற்பட்டுள்ள பிரச்சனை அதாவது நாம் தமிழகத்தில் 90% அரிசியை பயன்படுத்திறோம் என்றால் அதில் 60% அரிசி விளைவது இந்த காவேரி படுகையில்தான். மீதம் நாம் கேரளா, கர்நாடக போன்ற பகுதியில் இருந்து இறக்குமதி செய்யும் அரிசியே.

இந்த மீத்தேன் திட்டம் செயல்ப்பட்டால் 60% அரிசி பயன்பாட்டை எதைக்கொண்டு நிரப்புவோம் நாம்.....??

அதே போல கீழடி ஆராய்வு ஏன் நிறுத்தப்பட்டது என்று தெரிந்துக்கொள்ள முயலவில்லை. அதாவது இந்தியாவில் நாகரீகம் தோன்றிய இடம் சிந்து சமவெளி என்று நம் சிறு வயது சமூக அறிவியல் பாடத்தில் படித்திருப்போம்.

ஆனால் இந்த கீழடி அகழ் ஆராய்வு சிந்து சமவெளி நாகரீகத்தை விட பல ஆயிரம் ஆண்டு தொன்மை கொண்டதாக ஆதாரத்தோடு விளக்குகிறது. அப்படி பார்க்கப்போனால் தமிழனின் நாகரீகமே தொன்மை என காட்டுகிறது.

அதே போல தான்
ஏன் ஏறுதழுவுதல் விளையாட்டுக்கு தடை....
கூடங்குளம் பிரச்சனை...

கர்நாடக தமிழக அணை பிரச்சனை என பல விடயம் உள்ளது. இதை அனைத்தையும் நாம் மேலோட்டமாக பார்த்து சென்றால் சிறிய விடயம் போல் தெரியும்.

ஆனால் ஒவ்வொன்றின் பின்புறத்திலும் ஓர் மிகப்பெரிய பிரச்சனை இருக்கிறது. அதுவும் நம் வாழ்வாரத்தை சுற்றி நடக்கிறது.

இளைஞர்கள், இளைஞிகள் என அனைவரும் அரசியல் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அது என்றோ நம் சமுதாயத்தில் நம்மை அடையாளம் காட்டும்.

அதற்கு முதலில் நாம் அரசியல் பழக வேண்டும்.

**- ரஞ்சித்,** மன்னார்குடி

## அனாதை

- பழனிவேல் ஆறுமுகம்

ஈரைந்து மாதங்கள்
என்னை கருவிலே சுமந்து

இவ்வுலகிற்கு வருவேனோ, மாட்டேனோ என்று
எந்நேரமும் ஏக்கத்துடன்

இடிபோல என்னை சுமந்து
ஈன்றெடுத்த தாயே!

எங்கே இருக்கின்றாய் நீ?.....

இன்று வீதியிலே
விலாசமில்லாத ஜீவனாய்
உலா வருகின்றேன்....

அனாதை என்ற விலாசத்தோடு!.....

# லெட்சுமி பர்னிச்சர் நிறுவனம்


கார்த்திகேயன்

இது வரை தன்னுடைய நிறுவனத்தை பற்றி பெரும்பாலும் யாரிடமும் விவாதிக்காத விடயங்களை கூட நம்முடன் விவாதிக்க தொடங்கினார் லெட்சுமி பர்னிச்சர் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள்.

அவருடன் நடைபெற்ற சிறு விவாதத்தை இங்கு பகிர்கிறோம்.

தங்கள் நிறுவனம் எப்பொழுது துவங்கப்பட்டது மற்றும் அதன் முதலீடு எவ்வளவு தோழர் அன்றைய தினத்தில்?

எங்கள் பூர்விகம் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி, என் தாத்தா அழகர்சாமி, சரியாக நினைவில்லை ஆனால் அவர் காலத்தில் ரூ.100/- முதலீட்டுடன் மிதி சக்கர வண்டி கொண்டு என் தந்தையுடன் தொழிலை தொடங்கினார் என்று என் பாட்டி கூறினார்.

அன்றைய தினங்களில் மன்னார்குடி மற்றும் சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளுக்கு சென்று துணிகளை விற்பனை செய்து வந்தார்கள்.

பின் அவர்களின் கால்களுக்கும், சக்கரங்களுக்கும் ஓய்வு கொடுக்கும் வகையில் இன்று நம் நிறுவனம் இருக்கும் இதே இடத்தில் தான் அம்பிகா ஜவுளி நிறுவனமாக மாறியது அவர்கள் செய்து வந்த தொழில்.

எங்கோ உள்ளவர்களை பற்றி தெரிந்து கொள்வதை விட, உள்ளூரில் உள்ள நிறுவனங்களை பற்றி அறிவதில் எப்பொழுதும் சிறப்பு தான், ஆனால் இன்று அந்த அம்பிகா ஜவுளி நிறுவனத்தை காணவில்லையே என்றோம்.

அது தான், 15 ஆண்டுகளுக்கு முன் லட்சுமி பர்னிச்சர் என்று மாற்றப்பட்டு தற்பொழுது சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றார் கார்த்திகேயன் அவர்கள்.

சிறப்பு, கடும் உழைப்பிற்கு பின் தான் இந்த நிலையை எட்டி உள்ளீர்கள் வாழ்த்துகள் தோழர் என்று நாம் கூறும் போதே ...

ஆமாம் தாத்தா மற்றும் அப்பாவின் கடின உழைப்பில் உருவான நிறுவனம், இன்று நான் நிர்வகித்து வருகிறேன். அவர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் அளவிற்கு எனக்கில்லை, ஆனால் எப்பொழுதும் போல் தொழிலில் ஏற்படும் சிரமங்கள் உள்ளது அதை

நாம் எதிர்கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்கத்தான் வேண்டும் என்றார் கார்த்திகேயன் சிரித்து கொண்டே.

அவர் சிரிக்கும் போது, அவரின் கன்னத்தில் விழும் குழிகளில் விழுந்துவிட்டோம்.

உங்கள் தாத்தா மற்றும் அப்பாவின் உழைப்பை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லுங்கள் அவர்களும் பயனுறுவார்கள். இது பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு செய்யும் நற்செயல். உங்களை மகிழ்வுடன் பார்க்கும் போது அவர்களும் மகிழ்வார்கள் தோழர் என்றோம்.

தாத்தா, அப்பா இருவரும் இறந்து விட்டார்கள் என்று வருத்தத்துடன் கார்த்திகேயன் கூறும் பொழுது. அவர்களின் இழப்பு எப்படிப்பட்டது என்று அவரின் சொற்கள் உணர்த்தியது நமக்கு.

தற்போது நீங்கள் இல்லாமல் உங்களுடன் யாரும் நிர்வாகத்தில் பங்கு கொண்டு உள்ளார்களா தோழர் என்றோம்.

மிக அவசியமான இடத்தில், அதுவும் கணக்கு வழக்குகளை பார்த்து கொள்வதில் என் மனைவி உள்ளார், என் சித்தப்பா மேலாளராக உள்ளார். இது தவிர நீண்ட நாட்களாக பணியாளர்களாக சுமார் 18 நபர்கள் பயணிக்கிறார்கள்.

அதே போல் நடைமுறை பிரச்சனைகள் என்னவெல்லாம் உள்ளது உள்ளூரில் தொழில் செய்வதால்?

இணைய தளங்கள் தான் மிகவும் பாதிப்பு ஏற்படுத்துகிறது, கடையில் எங்களிடம் பொருள்களை தேர்வு செய்து விட்டு, இணையத்திற்கு சென்று விலையை பார்த்து விட்டு இவ்வளவு குறைவாக உள்ளது என்று கூறுவார்கள்

இணையத்தில் வாங்கினால் warranty பிரச்சனை வரும், அதில் ஏமாற்றம் ஏற்பட்ட பின்பு தான் உணர்வார்கள். பலர் ஏமாற்றுகிறார்கள் என்பதை.

எங்களிடம் வாங்கினால் சர்விஸ் சரியில்லை எனில் மாற்றி கொடுக்கவும் இல்லை என்றால் பிரச்சனை செய்வேன் என்பார்கள்.

இணைய வியாபாரத்தில் வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு அழைத்து பதிவு செய்து, பணியாளர்கள் வரும் வரை காத்திருக்க வேண்டியதுதான், வேறு வழியில்லை.

எல்.இ.டி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் பொழுதே 1 வருட உத்திரவாதம் தான் என்று கூறி விற்பனை செய்வோம். ஆனால் warranty முடிந்து 1 மாதம் 2 மாதத்தில் பழுதாகும் பொழுது நீங்கள் விற்பனை செய்யும் பொருட்கள் 1 வருடம் தான் வேலை செய்யுமா என்று கூறி பிரச்சனை செய்வார்கள். அந்த எல்.இ.டி டிவி பேனல் 13000 ஆகும் பட்சத்தில் உற்பத்தி செய்யும் நிறுவனத்திடம் பேசி மாற்றி தர வேண்டும் இல்லை என்றால் நாங்கள் எங்கள் பணத்தில் மாற்றி தர வேண்டும்.

எனக்கு தெரிந்த வாடிக்கையாளர் 32 அகலம் கொண்ட மைக்ரோ மேக்ஸ் எல்.இ.டி வாங்கி சென்றார் மற்றும் மீதம் கொஞ்ச பணத்தை பின் வந்து தருவதாக கூறி சென்றார். நான் 20 முறை தொடர்பு கொண்டு விட்டேன் வருகிறேன் என்று கூறினார். இது வரை வரவே இல்லை.

இப்படி பல பிரச்சனைகள் உள்ளது, ஆனாலும் மன்னார்குடியில் தொழில் செய்வது மற்றும் நம் மக்களுடன் நாட்களை செலவிடுவது தான் தனக்கு மகிழ்ச்சி என்றார் கார்த்திகேயன்.

அதே போல் உள்ளூர் உற்பத்தியில் உருவாகும் பொருள்களையும் லட்சுமி பர்னிச்சர் நிறுவனம் விற்க தயாராக உள்ளோம். குறிப்பாக மாணாக்கர்களின் சிறு சிறு கண்டுபிடிப்புகளை சந்தைக்கு கொண்டு வந்து விற்க திட்டமிட்டு வருகிறோம் என்று கூடுதல் தகவலையும் நமக்கு தந்தார்.

இதைவிட தொழில் செய்யும் ஊருக்கு சிறப்பாக என்ன செய்ய இயலும் என்று கூறியும், அதே நேரத்தில் மீண்டும் அவர்கள் ஏற்கனவே செய்து வந்த ஆடை நிறுவனத்தை மீண்டும் மன்னைக்கு கொண்டு வாருங்கள் என்று சொல்லியும் விடை பெற்றோம்.



S. அமிர்தவர்ஷினி (ஆறாம் வகுப்பு)
தரணி மெட்ரிக்குலேசன் பள்ளி, மன்னார்குடி.

அன்பே மெய்யானது
அன்பு அனைத்தையும் செய்யும்
அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்
அன்பு உள்ளம் எதையும் மறைக்காது
மறைக்கவும் தெரியாது.

தூய்மையான அன்பு தெளிந்த நீரோடை போன்றது
அன்புக்கு உருவம் இல்லை என்று யார் சொன்னது?
உருவம் உண்டு
நம்மீது அன்பு கொண்டவரின் உருவமே அது.

**சாலினி நெல்சன்**
மன்னார்குடி

இணையத்தில் நீங்கள்
பார்த்து, மாதிரி பிடித்திருந்தால்
அதை போலவே
உங்களுக்கு
வடிவமைத்து தருகிறார்
மன்னார்குடியை சார்ந்த
**ராஜேஸ்வரி சுரேஷ் குமார்**

அவரின்
கை வண்ணத்தில்
உருவான படைப்புகள்
உங்கள் பார்வைக்கு



# எக்காளம் ஊத போகிறது சீக்கிரம் அழித்து கொள்ளுங்கள்...?

இயற்கையை எவ்வளவு முடியுமோ
அவ்வளவு சுரண்டுங்கள்.
மீதமிருப்பது
சில வருடங்கள் தான்...

ஐம்பதில் வளையாதது அடுத்த ஐந்து ஆண்டுகளில் நிச்சயம் வளைப்பான் என் தலைவன் என்று மார் தட்டுங்கள் இன்னும் கொஞ்சம் நாள் தான், உன் தலைவன் அமெரிக்கா சென்றுவிடுவான்...

தலைமை கற்று கொடுத்த கொச்சை சொற்களால் உயிர் நட்புகளை நோகுமளவு வசைபாடி கொள்ளுங்கள். அதோ தெரிந்தே விட்டது ongc கொள்ளிகட்டை....

உணர்வால் இணைந்த ஒரு சிலரையும் உள்குத்தாடி சீக்கிரமாய் பிரித்து விடுங்கள் நேரமில்லை. நாட்கள் கொஞ்சமே...

கம்யூனிசம்.. தேசியம்.. திராவிடம்.. காவியை மையப்படுத்தி கட்டி புரண்டு சண்டையிடுங்கள்.. களைப்பு தீர எண்ணை கலந்த தண்ணீர் இருக்கவே இருக்கு....

முகநூலில் கோபத்துடன் பதிவிட்டு மிச்சம் வைக்காமல் அழித்து விடுங்கள் கொஞ்சம் நஞ்சம் இருக்கும் நட்பையும், மனிதத்தையும் .. 1000 அடி தோண்டி விட்டான்.. இன்னும் 500 அடி தான் சவகுழி தயாராகி விடும்...

பிள்ளைகளுக்கு உங்கள் சாதி பெருமைகளை வேகமாக சொல்லிகொடுங்கள். நீங்கள் ஆண்ட பரம்பரை என்று தெரியாமலேயே மரணித்துவிட போகிறான்...

மீத்தேன், கைட்ரோகார்பன், நியூட்ரினோ, கெயில்.. ஆஆ..
என்ன திமிர் இருந்தால் ஆங்கிலத்தில் பெயர் வைப்பான்..
தமிழில் வைக்க சொல்லுங்கள் உங்கள் கல்லறை பெயர்களை...

முன்னேறி செல்லுங்கள்..
தமிழ் நண்டு கதை பொய்யாகிவிடும்
வாரி விடுங்கள் கால்களை..
நட்பாவது மண்ணாவது..
மீத்தேனில் மூழ்கி மாண்டாலும்
சாதி பெருமை முக்கியம்..

இன்று கதிராமங்களம் கதறினாலும்
நாளை தமிழினமே பதறினாலும்
தமிழகத்தின் கடைசி தலைமுறை நீ..
அகதியாய் போனாலும் சாதியும் கட்சியும்
உன்னோடு வரும்.. இறுக்கமாய் பிடித்து புழு பிடித்து மரணி....



- அருண் ரவி

# HDR MODE



செந்தில்குமரன்
மன்னார்குடி

Mobile cameraல் HDR MODE என்றால் என்ன என்பதை பற்றி காண்போம்.

HDR ன் முழு விரிவாக்கமானது HIGH DYNAMIC RANGE ஆகும்.

இதை எங்கு, எப்பொழுது, எதற்காக பயன்படுத்த வேண்டும் என்பதை அறிய தொடர்ந்து படிக்கவும்.

இந்த DYNAMIC RANGE என்பது ஒளியின் வெளிப்பாடு (EXPOSURE) எப்படி இருந்தாலும் அதை தெளிவாக அதன் நிறம் மாறாமல் எடுப்பதை குறிக்கும்.

உதாரணத்திற்கு சூரிய ஒளியில் புகைப்படம் எடுக்கும் போது Frameல் ஒரு பகுதி வெளிச்சமாகவும் சில பகுதி வெளிச்சம் குறைவாகவும் காணப்படும். அந்த மாதிரியான சூழலில் HDR மூலம் தெளிவான காட்சிகளாக புகைப்படம் எடுக்க முடியும்.

நான்கு வருடத்திற்கு முன்பு வரை, இந்த HDR MODE இல்லை. புகைப்படம் எடுக்கும் போதே மூன்று விதமாக அதாவது ஒளியின் வெளிப்பாடு (EXPOSURE) அதிகமாகவும், குறைவாகவும், நடுவிலும் வைத்து எடுத்த பிறகு அதனை PHOTOSHOPல் தெளிவான புகைப்படங்களாக மாற்றிக் கொள்ளும் விதமாக இருந்தது. இது முற்றிலும் நாமே செய்து கொள்வதாக இருந்தது. ஆனால் தற்போது 5000 ரூபாய் கைப்பேசியிலும் HDR MODE உள்ளது. ஆரம்ப கட்டத்தில் HDR MODEல் வைத்து புகைப்படம் எடுத்தோமேயானால் அதுவே மூன்று புகைப்படம் எடுத்து எதில் ஒளி வெளிப்பாடு சரியாக வந்துள்ளது என பார்த்து அதனை மட்டும் சேமித்து வைத்துக் கொள்ளும். அதுவரைக்கும் நாம் அந்த கைப்பேசியில் படம் பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும். தற்போது ஒரே முறையில் புகைப்படம் எடுத்து ஒளி வேறுபாடுகளை தானாகவே சரிசெய்து கொள்கிறது. காணொலி எடுக்கும் போதும் தானாகவே HDR MODE வேலை செய்கிறது.

ஆக இனிமேல் புகைப்படம் எடுக்கும் போது ஒளி வெளிப்பாடுகளில் வித்தியாசம் இருப்பின் HDR MODEல் வைத்து எடுங்கள்.

HRD MODE OFF



HRD MODE ON





ராஜேஷ்

ஆதி
நானல்ல
அந்தம் நான்.

எங்கும் எதிலும் நீக்கமற
நிறைந்திருப்பவன் நான்.

சாலையை ஊடருக்கும்
வெள்ளத்தை கூட என்னால் தடுக்க முடியும்.
விளை நிலங்களை என்னால் வீணாக்க முடியும்.

உன் வாழ்வியலை
எளிதாக்குவது போல
உன்னோடு உறவாடும்
எமன் நான்.

நானே நெகிழி....

-----------------

திரைகடலோடியும்
திரவியம் தேடி...

விரட்டி விரட்டி திரட்டியதெல்லாம்
சேர்த்துவைத்த பானை ஓட்டை
என உணர்வதற்குள்
ஓடிவிட்டது பல வருடங்கள்.

இளநரை கிழநரை ஆவதற்குள்
மறுகரை போய் சேர்வோம் வா மக்கா..

-----------------

பெற்றது ஒன்று
தத்து இரண்டு

மொத்தம் மூன்றாய்
நான்கு மாத உன்னோடு

ஐந்தாம் எண் வருசை சீட்டுடன் மருத்துவமனையில் இருக்கிறேன்...
நித்தம் வரும் கணவடி
நினைவாவது எப்போது????

# சிந்திப்பீர்! மனிதா! சிந்திப்பீர்!

தண்ணியிலே தன்னிலை மறந்து
உன் நிலை தடுமாறி - உன்
குடும்பத்தாரையும் தடுமாற வைத்து
நீ சாதிக்கப் போவது எதனை மனிதா
சிந்திப்பீர்! மனிதா! சிந்திப்பீர்!

சிந்திக்கும் சக்தி பெற்ற நீ
புத்தியின்றி தன்மானம் இழந்து
மதுவே கதியென்று வீழ்ந்து கிடந்து
நீ சாதிக்க போவது எதனை மனிதா?
சிந்திப்பீர்! மனிதா! சிந்திப்பீர்!

வீட்டுக்கொருவர் நம் தேசமாதாவின்
அடிமை விலங்கினை உடைத்த காலம் மாறி
வீட்டுக்கொருவர் மது அரக்கனிடம் அடிமைப்பட்டு
நீ சாதிக்க போவது எதனை மனிதா?
சிந்திப்பீர்! மனிதா! சிந்திப்பீர்!

ஆறறிவு வரம் பெற்ற மனிதனே
அந்த ஆறாம் அறிவினை நல்வழிபடுத்தி
நம்மையும், நம் வருங்கால சந்ததியினரையும்
இயற்கை இடர்பாடுகளிடம் இருந்து காப்பாற்ற
பாடுபடும் நம் மன்னையின் மைந்தர்களுடன்
இணைந்து கைகோர்த்து செயல்படுவோம் மனிதா!

சிந்திப்பீர்! செயல்படுவீர்!

- ராணி வாசுதேவன்,
ராமநாதன் தெரு, மன்னார்குடி

# அப்பா.....

அம்மாவின் அரவணைப்பில்
வளர்ந்ததை விட உன் அன்பின்
கதகதப்பில் வளர்ந்ததே அதிகம்...
என் மீதான உன் அன்பை மட்டுமே
உணர்ந்திருக்கிறேன்.

கோபம் கண்டிப்பு எதுவும்
கண்டதில்லை..

நீ உழைக்க மறந்த நாட்களில் கோபம்
கொண்டேன்...

இன்று நீ உழைப்பது கண்டு தினம்
நொறுங்கி போகின்றேன்...

அப்பா உயிரிலே கலந்து உணர்விலே
உறைந்த உன்னத உறவு.

உன் அப்பாவை இழந்த பிறகே நீ
வாழ்வின் அர்த்தங்கள் புரிந்து
கொண்டாய்.

இழக்க கூடாத செல்வம் அப்பா.....

மறக்க கூடாத நினைவுகள் அப்பா....

இசைத்து ரசித்திடும் பாடல் அப்பா...
உரக்கச் சொல்லிடும் கவிதை
அப்பா....

நீ வாழ வேண்டும் பல காலம். ...
அன்பை காட்ட வேண்டும் கால
காலம்....

அன்றும் சுமந்தாய்... இன்றும்
சுமக்கிறாய்.... என்றும் சுமப்பாய்...

- பொன்மணி வள்ளுவன்,
கீழத்திருப்பாலக்குடி, மன்னார்குடி.

# ஹைட்ரோகார்பனை
## நான் ஆதரிக்கிறேன், ஆனால்...



இரா. கோபிநாத்
மன்னார்குடி

எல்லாரும் ஹைட்ரோகார்பனை எதிர்க்கிறார்கள். ஆனால் நான் ஆதரிக்கிறேன். உடனே என்னை வசைபாடி இணையத்தில் பதிவிட உங்கள் கைகள் பரபரக்கும் அதற்கு முன்பு எனது கட்டுரையை படித்துவிட்டு செல்ல உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஹைட்ரோகார்பன் திட்டம் ஏன் அவ்வளவு முக்கியம்?

ஆமாம், ஹைட்ரோகார்பன் ஆய்வு முக்கியம் என்று சொல்கிறேன். நாம் இந்த திட்டம் மூலம் மின்சாரம் பெற முடியும். உலகில் மின்சாரம் தேவையானது, உலகின் மொத்த மின்சாரத்தில் 46% மின்சாரம் நிலக்கரி மற்றும் எண்ணெய் ஆகியவற்றைச் சார்ந்தது.

மின்சார தேவை விகிதத்தை அதிகரிப்பதன் மூலம், பூமியில் தற்போது மீதி இருக்கும் எண்ணெய் மற்றும் நிலக்கரி இல்லாமல் போய்விடும். அந்த சூழ்நிலையில், தொலைக்காட்சி பார்ப்பதற்கோ, கைபேசிகளை பயன்படுத்தவோ அல்லது எந்த மின் சாதனங்களை இயக்கவோ நமக்கு மின்சாரம் இல்லாமல் போய்விடும்.

முதலில் ஹைட்ரோகார்பன்கள் என்றால் என்ன என்பதை பார்த்துவிட்டு செல்வோம். ஹைட்ரோகார்பன் என்பது ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மூலக்கூறுகளால் ஆனது. இந்த அணுக்களுக்கு இடையில் இணைப்புகள்.

- மீத்தேன் 1 கார்பன் மற்றும் 4 ஹைட்ரஜன்,
- ஈதேன் 2 கார்பன் மற்றும் 6 ஹைட்ரஜன்,
- புரொபேன் 3 கார்பன் மற்றும் 8 ஹைட்ரஜன்

என்று தொடர்ந்து செல்கிறது... இவையனைத்தின் அடக்கமே ஹைட்ரோ கார்பன் ஆகும்.

இப்போது, ஹைட்ரோகார்பன்கள் பிரித்தெடுப்பதற்கு என்ன காரணம் என்பதை பார்ப்போம் மீத்தேன் எரிந்த போது, அது ஆக்ஸிஜன் மூலக்கூறுகளுடன் செயல்படுகிறது, இந்த எதிர்வினையினால் அதிக ஆற்றல் வெளியிடப்படுகிறது.

இந்த வெளியிடப்பட்ட வெப்ப ஆற்றல் மின்சாரமாக மாற்ற பயன்படுத்தப்படும். அதன் காரணமாக மத்திய அரசு மீத்தேன் மற்றும் ஹைட்ரோகார்பன் என பல சந்தர்ப்பங்களில் பல பெயர்களில் வந்து இறங்கியது.

முன்மொழியப்பட்ட தொழில்நுட்பத்தின் மூலம், இயற்கை எரிவாயு உற்பத்தியில் 95% மீத்தேன் இருக்கும், ஆனால் மத்திய அரசின் ஹைட்ரோ கார்பன் திட்டம் கடுமையான தீங்கு மற்றும் இழப்புகள் உடையது.

மத்திய அரசின் செயல்முறை விவசாயிகளுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அரசு பொறுப்பற்ற முறையில் முன்னோக்கி செல்ல விரும்புகிறது.

இந்த திட்டத்தை பிரித்தெடுப்பிற்கான மாற்றே, சமீபத்திய ஆராய்ச்சி மூலம் 14 முதல் 25 மில்லியன் டன் மீத்தேன் வாயு பூமியின் மேற்பரப்பில் இருப்பதை சொல்கிறது.

வளிமண்டலத்தில் தப்பித்து மீத்தேன் மூலக்கூறுகள் எல்லாம் எங்கு உள்ளது என உங்களுக்குத் தெரியுமா?

''குப்பைகளில் உள்ளது'' ஆனால்  இந்தியாவில் நீங்கள் நினைத்திருந்தால் குப்பை கழிவுகளில் இருந்து ஹைட்ரோ கார்பன் எடுக்க முனைந்திருக்கலாம். இந்த கடினமான உண்மையை நாம் நிராகரிக்க முடியாது!

இந்தியாவின் மிகப்பெரிய நகராட்சி, ஒரு மாநகருக்கு ஒதுக்கப்பட்ட ரூ.277 கோடி வரவு செலவு திட்டத்தில், சுமார் ரூ.300 கோடி திட கழிவு முகாமைத்துவத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது (குப்பை, சேதம்). ஒரு நல்ல நோக்கத்தில் எங்கள் வரி பணத்தின் சுமார் 10% திட கழிவு மேலாண்மைக்கு செல்கிறது,

திடமான கழிவுகள் அழிந்து போகக்கூடிய மற்றும் அழிக்க முடியாதவைகளாக பிரிக்கப்பட வேண்டிய மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த வேலை செய்ய அரசு செலவிடுகிறது. அதை அகற்றாமலும் மறுசுழற்சி செய்யாமலும் நம் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, கழிவுகள் 80 முதல் 100 அடிக்கு மேல் வளர்ந்து கொண்டிருக்கிறது.

குவிந்து கிடக்கும் கிடங்கிற்குள் ''பொருத்தமற்றது'' தமிழ்நாட்டின் பல வெளிப்புற இடங்களில் கழிவுப்பொருட்களை கொட்டி வைக்கப்படுகிறது.

உதாரணமாக சென்னையை எடுத்துக் கொண்டால் இந்த குப்பைக் கூழிலிருந்து, 1 டன் கிலோ குப்பைகளில் இருந்து தோராயமாக 40 கிலோ மீத்தேன் வரை எடுக்க முடியும்.

சென்னையில் மட்டுமே ஒவ்வொரு நாளும் 4500 டன் குப்பை கூழங்கள் வீசப்படுகின்றன. தினசரி 1 லட்சம் டன் குப்பைகளை குவிக்கும் 200 நகராட்சி நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளது.

ஒரு இலட்சம் டன் குப்பையிலிருந்து, 40 லட்சம் கிலோ மீத்தேன் உற்பத்தி செய்யப்படுகிறது தோராயமாக 2 லட்சம் சிலிண்டர்கள் தினசரி மதிப்புள்ள எரிபொருள் நிரப்பலாம். இந்தியாவில் 44 இடங்களில்.

நீரியல் விரிசல் மூலம் மீத்தேன் எடுக்கும் திட்டங்களை மத்திய அரசு உருவாக்கியுள்ளது என்பதை நாம் முன் வைக்க விரும்புகிறோம்.

இந்த செயல்முறையின் மூலம், ஒரு வருடத்திற்கு 1 பில்லியன் கிலோ மீத்தேன் உற்பத்தி செய்யலாம். ஆனால் குப்பைக் குழாயிலிருந்து ஒரு வருடத்திற்கு சுமார் 1.5 பில்லியன் கிலோ மீத்தேன் வரை உற்பத்தி செய்ய முடியும்.

இதற்கும் அப்பால், இந்த செயல்முறையிலிருந்து எஞ்சியுள்ள பல டன் கழிவுகள் இயற்கை உரங்கள் உற்பத்தி செய்யப் பயன்படும், இது சாதாரண நிலத்தை பயிர் நிலங்களாக மாற்ற பயன்படுத்தலாம்.

குப்பையில் இருந்து மீத்தேன் பிரித்தெடுக்கும் செயல்முறை புவி வெப்பமடைதலின் விளைவுகளை குறைக்கும்.

பல வளரும் நாடுகளில், குப்பைத் தொட்டிலிருந்து மீத்தேன் பிரித்தெடுக்கப்படுகின்றன. இதை புரிந்துகொண்ட கனடா நாடு அண்டை நாடுகளில் இருந்து 10 லட்சம் டன் குப்பைகளை இறக்குமதி செய்கிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸ் 7 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு மின்சாரம் தயாரிக்கவும் மற்றும் வழங்குவதற்கு 500 நிலப்பரப்பு கொண்ட பல மீத்தேன் பிரித்தெடுத்தல் தொழிற்சாலைகளை இயக்குகிறது.

மீத்தேனை குப்பைகளினால் பெறுவது மூலம் நாட்டின் ஆற்றல் கோரிக்கைகளைச் ஈடு கட்டுவதால் விவசாயிகளின் நலனும் காக்கப்படும்.

ஒரு நல்ல அரசாங்கம் இந்த விருப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்கள் மீத்தேன் எடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை அழிக்க கூடாது. மீத்தேன் திட்டத்தை சரியான முறையில் பிரித்தெடுத்து, மக்களை காப்பாற்றுவோம், ஆனால் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் நிலத்தை தவறாக வழிநடத்திச் செல்வதையும் நாங்கள் ஏற்க மாட்டோம். எங்கள் அரசாங்கத்திற்கு இக்கட்டுரை மூலம் வேண்டுகோள் வைக்கிறோம்.

இனி விவசாயிகளை வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டாம்.

‘‘நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க எங்கள் வாழ்வாதாரத்தை அழிக்காதீர்‘‘
நாங்கள் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு ஆதரவு தருகிறோம்.

ஆனால் நீங்கள் சரியான வழியில் இந்த திட்டத்தை செயல்படுத்தினால் மட்டுமே!

- கோபிநாத் ராஜகோபாலன்



அட்டைப்பட உதவி

**வசந்தன்** (+91 97868 28973)

புகைப்பட கலைஞர், மன்னார்குடி

# ஒரு விதவை விவசாயின் ஓலம்....



ரா.ராஜகுரு
மன்னார்குடி

களிறு கட்டி போரடிச்சு பொங்கிப்போட்ட பழங்கதைய
பேசிகிட்டே வெதச்சதால நட்டப்பட்டு நாண்டுகிட்டான்
எம்புருசன்....

வந்த வாய்கரிசி நெல்லோடு கொஞ்சமா வெளஞ்தையும்
விக்கயில விலையுமில்ல

நான் வித்தா வச்ச நெல்ல வீசி வச்சேன் வயலுக்குள்ள..

வந்த வானம் பெய்யலயே
எம்மனசும் ஆறலயே ..

வயல் சேத்துக்கு மழையில்ல..

எனக்கோ சோத்துக்கும் வழி இல்லை...

முடிஞ்சி வச்ச காசையும் எம்புருசன் குடிச்சே அழிச்சான்
பார்ல....

எம் மகவு பசிதீர பாலில்ல என் மாருல...

அண்ணன் தம்பி நாமனனு அணைய கட்டி நாமம் போட்ட.....
அணைதண்ணி நிலுவையில
வருமோ வராதோ..... நிலத்தடியும் உப்பாக
எந்தாகந் தீரலையே .. வயசாளி பெருசெல்லாம்

கொடும் பாவிசெஞ்சி
மாரடிச்சிப்புரண்டு அழ...

இந்த உசுரமட்டும் வச்சிகிட்டு...

நான் வானத்த பாத்து நிக்க...

மழை வருமோ வராதோ...

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

உங்களின் படைப்புகள் சிறுகதை கட்டுரை கவிதை ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

# எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322** **http://maintharkal.mannai.in**